15

# பகுத்தறிந்து வாழுதல்

## (7:1-29)

*மலையின் மீது இயேசுவின் பிரசங்கத்தினுடைய நிறைவுப்பகுதியில் அவர், மாய்மாலம், ஜெபம், நீதியான வாழ்வின் நியாயமான சட்டம் மற்றும் சத்தியத்திற்கு ஊக்கமாகக் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் ஆய்வுக்கருத்துக்களை எடுத்துரைத்தார். மற்றவர்களை நியாயந்தீர்த்தலில் மாய்மாலமாயிருத்தல் பற்றி அவர் எச்சரிக்கை செய்தார் (7:1-6). இயேசு தமது உரையைக் கேட்டவர்கள், ஜெபத்திலும் தேவனால் அளிக்கப்படும் நல்ல ஈவுகளை நாடுதலிலும் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் என்று புத்திமதி கூறினார் (7:7-11). பொன்விதி (7:12) என்று அறியப்பட்டுள்ள கொடுத்து வாங்கும் நடக்கையின் கொள்கையை அவர், தமது உரையைக் கேட்டவர்கள், தெரிவு செய்யும்படி அறைகூவல் விடுத்து நேர்மாறுகளின் வரிசை ஒன்றை முன்வைத்தார் (7:13-27). அவர் தமது போதனைகளை முடித்தபின்பு, கூட்டத்தினர் ஆச்சரியப்பட்டனர் (7:28, 29).*

### *நீதியான நியாயத்தீர்ப்பு (7:1-6)*

***[1]நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.***

***[2]ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.***

***[3]நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?***

***[4]இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?***

***[5]மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.***

***[6]பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.***

இயேசு, 6ம் அதிகாரத்தில் கவலைப்படுதல் என்ற தலைப்பில் இருந்து 7ம் அதிகாரத்தில் நியாயந்தீர்த்தல்/முடிவுசெய்தல் என்ற தலைப்பிற்குக் கடந்து சென்று, தம்மைப் பின்பற்றுபவர்கள், மற்றவர்களைக் குறித்து அவசரமான

எதிர்மறை நியாயந்தீர்த்தல்களை/முடிவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது என்று அறிவுறுத்தினார். அவர் தமது சீஷர்கள், எல்லா நியாயந்தீர்த்தல்களையும்/முடிவு செய்தல்களையும் விட்டுச்செல்லும்படி வழிநடத்தவில்லை, ஏனெனில் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமக்களாக வாழுதல் என்பது நீதியான பகுத்தறிதலை அடிக்கடி வேண்டிக் கேட்கிறது.

**வசனம் 1.** இயேசு, **நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்** என்று கட்டளையிட்டார். இயேசுவின் தடைக்கூற்றினுடைய கிரேக்க மொழிக்கட்டமைப்பு - நிகழ்காலக் கட்டளை வினைச்சொல்லுடன் *mē* என்பது வளர்நிலையில் உள்ள ஒரு செயலை விட்டொழித்தலை வேண்டிக்கேட்கிறது. NLT வேதாகமத்தில் "மற்றவர்களை நியாயந்தீர்ப்பதை நிறுத்துங்கள்" என்றுள்ளது. எவ்வவகையான நியாயந்தீர்த்தலையும் இயேசு வன்மையாகக் கண்டிக்கிறாரா? மற்ற வசனப்பகுதிகளில் இருந்து, விஷயம் இப்படியாக இருப்பது இல்லை என்று நாம் அறிகிறோம். உதாரணமாக, இந்தப் பிரசங்கத்தின் பிற்பகுதியில் அவர், "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் ... அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று கூறினார் (7:15, 16). இந்த போதகர்கள் உண்மையானவர்களா அல்லது பொய்யானவர்களா என்பதைத் தீர்மானிக்கவும் அவர்களின் "கனிகள்" நல்லவையா அல்லது கெட்டவையா என்பதை முடிவு செய்யவும், இவர்களின் உபதேசத்தையும் வாழ்வுநடையையும் அவர்கள் (இயேசுவின் சீஷர்கள்) நியாயந்தீர்க்க வேண்டியிருக்கும் என்று அவர் கூறினார். யோவான் சுவிசேஷத்தில் இயேசு, "தோற்றத்தின்படி தீர்ப்புசெய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்றும் கூறினார் (யோவான் 7:24). தனிநபரின் சொந்த நிர்ணயத்தை மாத்திரம் முழுமையாக அடிப்படையாக வைத்துக் தனிப்பட்ட வகையில் நியாயந்தீர்க்குதலை அவரது புத்திமதி தடைசெய்கிறது, ஆனால் அதே புத்திமதி, நியாயந்தீர்த்தலில் தேவனுடைய நீதியான தர அளவையைப் பயன்படுத்தும்படி வேண்டுகோள் விடுக்கிறது.

"தீர்க்காதிருங்கள்" என்ற நமது ஆண்டவரின் கூற்று, நன்மைக்கும் தீமைக்கும் இடையில் அவற்றைப் பகுத்தறிதலைக் கண்டனம் செய்வதில்லை, ஏனெனில் இவ்விதமான தீர்ப்புகளை ஏற்படுத்தும்படி மற்ற வேதவசனங்களில் நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது (ரோமர் 16:17, 18; 1 கொரிந்தியர் 5:9-13; 2 கொரிந்தியர் 6:14-18; கலாத்தியர் 1:9; தீத்து 1:9-14; 3:10, 11; 1 யோவான் 4:1-3; 2 யோவான் 9-11; யூதா 3, 4). இயேசுவின் வார்த்தைகள், சபை ஒழுங்கு நடவடிக்கையைக் கண்டனம் செய்வதாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாது. இதை இயேசுதாமே 18:15-18ல் கட்டளையிட்டார், இதேபோன்று பவுலும் செய்தார் (1 கொரிந்தியர் 5:1-5; 2 தெசலோனிக்கேயர் 3:6, 14, 15). தேவனுடைய நீதியான தர அளவையைக் கொண்டு ஒரு சகோதரரைத் தீர்ப்பிடாமல், அவர் தவறில் உள்ளார் என்று நாம் எவ்வாறு அறிய முடியும்? (காண்க கலாத்தியர் 6:1.)

ஆகையால் இயேசுவின் கட்டளை - தேவனுடைய நீதியை வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் நீதியுடன் நெரெதிராக ஒப்பிடுதல் என்ற (5:20) - மலைப்பிசங்கத்தின் நோக்கத்தினுடைய சந்தர்ப்பப்பொருளில் கண்ணோக்கப்பட வேண்டும். "தீர்ப்பிடுதல்" என்பதற்குப்

*பயன்படுத்தப்பட்டுள்ள (krinō) கிரேக்க வார்த்தை, தீர்ப்பிடுதல்களைத் தேர்ந்துகொள்ளுதல், தெரிந்தெடுத்தல் அல்லது தீர்மானித்தல் என்பதைக் குறிக்கக் கூடும். வேதபாரகர் மற்றும் பரிசேயர்களால் காட்சிப்படுத்தப்பட்டது போன்ற, சுயநீதியான மற்றும் கடுமையான தீர்ப்பிடும் எண்ணப்போக்குகளை, இவ்வசனப்பகுதியில் இயேசு கண்டனம் செய்தார் என்பது தெளிவாக உள்ளது. இவ்வகையான ஆவியைக் கொண்டிருத்தலைத் தவிர்க்கும்படி அவர் தம்மைப் பின்பற்றுபவர்களை வேண்டிக்கொண்டார். அவரது கட்டளையானது, வெளித்தோற்றங்களைக் கொண்டு அல்லது இன்னொரு நபரின் நோக்கங்கள் அல்லது இருதயத்தைக் கொண்டு தீர்ப்பிடுதலைத் தடைசெய்கிறது (காண்க யோவான் 7:24; 1 கொரிந்தியர் 2:11). இது, தமது சொந்தப் பாவங்களைக் கண்ணோக்க மறுக்கும் அதே வேளையில், மற்றொரு நபரின் வாழ்வில் உள்ள தவறுகளையே எப்போதும் கண்ணோக்கும் எண்ணப்போக்கையும் கண்டனம் செய்கிறது (7:3, 4). இன்னொரு நபரின் மீது நாம், நித்தியத்திற்கும் நியாயத்தீர்ப்பைச் செலுத்த இயலாது, ஏனெனில் இயேசு கிறிஸ்து என்ற நீதியுள்ள நியாயாதிபதியால் நாம் யாவரும் நியாயந்தீர்க்கப்படுவோம் (யோவான் 5:22; ரோமர் 2:1, 2; 14:4, 10-12; 2 கொரிந்தியர் 5:10; 2 தீமோத்தேயு 4:8; வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15).*

*சமனான இடத்தில் செய்த பிரசங்கத்தில் இயேசுவின் கூற்றானது இரக்கத்தின் சந்தர்ப்பப் பொருளில் வைக்கப்பட்டுள்ளது: "ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள். மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள்" (லூக்கா 6:36, 37). ஒரு விளக்கவுரையாளர், "நாம் மன்னிக்கப்பட்டிருப்பதால் மன்னிப்பது போன்றே, தேவன் நம்மைப் பெருந்தன்மையுடன் நடத்தி இருப்பதால், மற்றவர்களைப் பற்றிய நமது முடிவுகளில் நாமும் பெருந்தன்மையாக இருக்க வேண்டும்" என்று கூறினார்.*[1]

***வசனம் 2.*** *இயேசு, தீர்ப்பிடுதலுக்கு எதிரான தமது கட்டளைக்கு அடிப்படையான விஷயத்தை அளித்தார்:* ***ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.*** *இவ்வசனம் "தீர்ப்பிடுதல்" (krimati krinete krithēsesthe) மற்றும் "அளவு" (metrōi metreite metrēthēsetai). என்ற வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கூறுதலில், அவற்றைக் கவிதை நடையில் பயன்படுத்துகிறது. "ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" என்பது மிகவும் நேரடியான மொழிபெயர்ப்பாக இருக்கும்.*

*"தீர்ப்பிடுதல்" மற்றும் "அளத்தல்" ஆகியவை சமமானவைகளாக உள்ள, ஒருபொருட்பன்மொழி இணைவியத்தை இவ்வசனம் கட்டமைக்கிறது. இயேசு பயன்படுத்திய அளவையின் மொழிக்கூறு பழமொழிரீதியானது போன்றுள்ளது (காண்க மாற்கு 4:24; லூக்கா 6:38). மிஷ்னா, "ஒரு மனிதர் எந்த அளவையைக்*

*கொண்டு அளக்கிறாரோ, அதே அளவை அவருக்குத் திருப்பி அளக்கப்படும்" என்று கூறுகிறது.*[2] *இந்த உருவகம், வாங்குபவர் வாங்க விரும்பும் பொருள்களை ஏற்புடைய அளவையினால் விற்பவர் அளக்கும் இடமான சந்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது. மைக்கேல்* J. *வில்க்கின்ஸ் அவர்கள், " 'அளவை' என்பது, எடை அல்லது தூரத்தை அளக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு அளவுகோலாக அல்லது அளவுப்பாத்திரமாக அல்லது கோலாக இருக்க முடியும், ஆனால் இங்குபோல இது அடிக்கடி உருவக நடையில் பயன்படுத்தப்பட்டது என்று விளக்கப்படுத்தினார்* (cf. *23:23)."*[3]

*இயேசு தடைசெய்த வகையிலான நியாயந்தீர்த்தலை ஏற்படுத்துவதில், ஒருவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், ஏனெனில் அவர் (ஒருவர்) மற்றவர்களை நியாயந்தீர்க்கப் பயன்படுத்திய அதே தர அளவையினாலேயே தாமும் நியாயந்தீர்க்கப்படுவார். மற்றவர்களை நாம் கடுமையாக நியாயந்தீர்த்தால், மிகமேன்மையான நியாயாதிபதியான தேவனால் நாம் கடுமையாக நியாயந்தீர்க்கப் படுதலை எதிர்ப்பார்த்தாக வேண்டும். தல்மூத் புத்தகம், "தனது அயலாருக்கு (தெய்வீக) நியாயத்தீர்ப்பு இறங்கி வரவேண்டும் என்று கூப்பிடுபவர், தாமே (தமது சொந்த பாவங்களுக்காக) முதலில் தண்டிக்கப்படுவார்" என்று கூறுகிறது.*[4] *டேவிட் ஹில் - அவர்கள், "ரபீக்களின் கூற்றுப்படி, தேவன் உலகத்தை - இரக்கம் மற்றும் நீதி என்ற இரண்டு 'அளவைகளினால்' நியாயந்தீர்த்தார்" என்று விளக்கப்படுத்தினார்.*[5] *ஒருவர் தம்மிடத்தில் தேவன் இரக்கமாக இருக்க வேண்டுமென்று நினைத்தால், அவர் மற்றவர்களிடத்தில் இரக்கம் நிறைந்தவராக இருக்க வேண்டும் (யாக்கோபு 2:13).*

***வசனங்கள் 3, 4.*** *இந்தக் கருத்து பற்றிய விஷயத்திற்குத் தொடர்புடைய விவரிப்புகள் இரண்டை இயேசு அளித்தார். அவற்றில் முதலாவது, தவறை உற்றுநோக்குதலை உள்ளடக்கிற்று (**பார்க்கிறது**; 7:3), மற்றும் இரண்டாவது அதனைத் திருத்துதல் (**எடுத்துப்போடுதல்**; 7:4) என்பதாக உள்ளது. செயல் விளைவில் அவர், "உன்னிடத்தில் பெரிய தவறு இருக்கும்போது உன் சகோதரன் கொண்டுள்ள சிறிய தவறை நீ எப்படி விமர்சிக்க முடியும்?" என்று கேட்டார். துரும்பு என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* (*karphos*) *கிரேக்க **வார்த்தை**, வைக்கோல் அல்லது மரத்துகளைக் குறிக்கிறது.* NIV *வேதாகமத்தில்* "speck of sawdust," *என்றுள்ளது, அதேவேளையில்* NJB *வேதாகமத்தில்* "splinter" *என்றுள்ளது. தீர்ப்பிடப்படும் இந்த நபரின் வாழ்வில் உள்ள பாவத்தை இயேசு நியாயப்படுத்தவில்லை, ஆனால் இந்த நபரின் மிகச்சிறிய பாவத்தை, விமர்சிப்பவரின் வாழ்வில் உள்ள மிகப்பெரிய பாவத்துடன் நேரெதிராக ஒப்பிட்டார். உத்திரம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* (*dokos*) *வார்த்தை, வீட்டின் கூரையைத் தாங்கி நிற்கப் பயன்படுத்தப்பட்ட உத்திரம் உட்பட, பெரிய **மரக்கட்டை** எதையும் குறிக்கக் கூடும். இங்கு இயேசு பயன்படுத்திய உருவகம், "தச்சர்"* (*tektōn*) *அல்லது "கட்டுபவர்" என்ற வகையில் அவரது பல ஆண்டுகள் அனுபவத்தில் இருந்து தரவழைக்கப்பட்டிருக்கலாம் (13:55; மாற்கு 6:3).*

*இப்பிரசங்கத்தின் முந்திய பகுதிகளில் போலவே, இயேசு தமது சிந்தனையைத் தெளிவாக்குவதற்கு, மிகைப்படுத்தும் கூற்றைப் பயன்படுத்தினார் (காண்க 5:23, 24, 29, 30, 34-36, 40). இருப்பினும்,*

இவ்விடத்தில் அவர் பயன்படுத்திய மிகை உவமையானது அதிகம் நகைச்சுவையானதாக, பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகக் கூட உள்ளது. ஒருவேளை இது, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைதல் (19:24) அல்லது கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குதல் (23:24) என்ற இயேசுவின் உருவகத்துடன் ஒப்பிடப்படக் கூடியதாக இருக்கலாம். கிரெய்க் கீனெர் அவர்கள், "ஒருவரை குழியினூடாக வழிநடத்த பார்வையற்றவரை எவரும் விரும்பமாட்டார் என்பதைப் போன்றே (15:14; 23:16), ஒருவரின் கண்களில் மருத்துவ அறுவைச் சிகிச்சை செய்வதற்குப் பார்வையற்ற கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவரை எவரும் விரும்பமாட்டார்" என்று குறிப்பிட்டார்.[6] ஒருவரின் கண்ணில் "துரும்பு" அல்லது "உத்திரம்" என்பதைக் கொண்டிருத்தல் என்பது, குறைவான மற்றும் அதிகமான பாவங்கள் என்ற கருத்திற்கான பழமொழி நடையாக இருக்கலாம்.[7]

**வசனம் 5.** திருத்துதல் பற்றிய இரண்டாவது விவரிப்பை இயேசு பயன்படுத்தினார். பெரிய பாவம் கொண்ட மனிதரை **மாயக்காரன்** என்று அவர் அழைத்தார் (காண்க 6:2, 5ன் மீதான விளக்கங்கள்). அவர் மற்றவர்களைக் காட்டிலும் தாம் மேன்மையானவர் என்று கருதிய சுயநீதியுள்ள தனிநபராகச் சித்தரிக்கப்பட்டார். ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடும்போது, அவரது சுயநீதியின் இயல்பு நியாயப்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது (காண்க 2 சாமுவேல் 12:1-14). இந்த உண்மையின் வெளிச்சத்தில், தல்மூத் பின்வரும் நல்ல அறிவுரையை அளிக்கிறது: "நீங்களே கொண்டுள்ள பிழையைக் கொண்டு உங்கள் அயலாரைக் கறைப்படுத்தாதீர்கள்."[8]

குறைவான பாவம், காணப்படாது விட்டுவிடப்பட வேண்டும் என்று இயேசு கூறவில்லை. அதற்குப் பதிலாக அவர், **முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்** என்று கூறினார். விமர்சிப்பவர் தமது சகோதரரைத் தீர்ப்பிடும்படிக்கு "உத்திரத்தை" எடுத்துப்போட வேண்டும் என்பதல்ல, அதற்கு மாறாக, தமது சகோதரரின் கண்ணில் உள்ள "துரும்பை" எடுத்துப்போட எவ்வாறு உதவலாம் என்று இன்னும் தெளிவாகக் காணக்கூடியவராவதற்காக அதை ("உத்திரத்தை") எடுத்துப்போட வேண்டும் என்பதே கருத்தாக உள்ளது. இப்படிப்பட்ட "துரும்பை" எடுத்துப்போடுதலுக்கான வல்லமை என்பது, ஒருவரின் சுய நீதியில் இருப்பதில்லை, ஆனால் தவறு செய்யும் சகோதரர் மீது அவர் கொண்டுள்ள அன்பு மற்றும் அவருக்கு உதவ வேண்டும் என்ற உண்மையான விருப்பம் ஆகியவற்றையே சார்ந்துள்ளது (லூக்கா 17:3; ரோமர் 15:1; கலாத்தியர் 6:1; 2 தீமோத்தேயு 4:2; தீத்து 1:13).

**வசனம் 6.** நியாயமற்ற தீர்ப்பிடுதலில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்ற தமது கட்டளையைத் தொடர்ந்து இயேசு, ஒரு முக்கியமான வித்தியாசத்தை ஏற்படுத்தும்படி தமது சீஷர்களிடம் கேட்டுக்கொண்டார்: **பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.**

பழங்காலத்தில் நாய்கள் மிக அரிதாகவே வீட்டுவிலங்குகளாகப் பழக்கப்படுத்தப்பட்டிருந்தன. அவைகள் கூட்டம் கூட்டமாகத் திரிந்தன மற்றும்

*கோபப்படுத்தப்படும்போது அல்லது போதிய அளவு பசியாக இருக்கும்போது அவைகள் மனிதர்களைத் தாக்கும். இதன் விளைவாக, அவற்றைப்பற்றி யூதர்கள் மிகவும் எதிர்மறையான கண்ணோக்குக் கொண்டிருந்தனர் (சங்கீதம் 22:16; நீதி மொழிகள் 26:11; லூக்கா 16:21; 2 பேதுரு 2:22; வெளிப்படுத்தின விசேஷம் 22:15). ஒரு நபரை "நாய்" என்று கூப்பிடுதல், அவர்மீது சுழற்றி எறியப்படக் கூடிய மிகப்பெரிய அவமானங்களில் ஒன்றாக இருந்தது (1 சாமுவேல் 17:43; 2 சாமுவேல் 16:9). யூதர்கள் புறஜாதியாரை "நாய்கள்" என்று அழைத்தனர் (15:26, 27), மற்றும் பவுல், கள்ளப்போதகர்களுக்கு இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார் (பிலிப்பியர் 3:2).*

*"பரிசுத்தமானது" என்ற சொற்றொடர் (to hagion) சற்று வேறுபாட்டுடன் பலி மாம்சத்தைக் குறிப்பதற்கு செப்துவஜிந்த் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (யாத்திராகமம் 29:33, 34; லேவியராகமம் 2:3; 22:10-16; எண்ணாகமம் 18:8-19). சுயமரியாதையுள்ள எந்த யூதரும், தேவனுக்குப் பலியாகச் செலுத்தப்பட்ட மாம்சத்தின் ஒரு துண்டை, நாய்களுக்குக் கொடுத்தலைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்கமாட்டார். சுவிசேஷமாகிய நற்செய்தி மாபெரும் மரியாதையை வேண்டிக் கேட்கிறது என்றும் அதைக் கேள்விப்பட மறுக்கும் எவருக்காவும் அது வீணாக்கப்படக் கூடாது என்றும் இயேசு அறிவித்தார்.*

*வேதவசனத்தின் வேறொரு இடத்தில், நாய்களுடன் பன்றிகள் குறிப்பிடப்பட்டுள்ளன (2 பேதுரு 2:22). இவைகள் சுத்தமற்ற மிருகங்களாக இருந்தன (லேவியராகமம் 11:7; உபாகமம் 14:8), எனவே இவைகள் புறஜாதியாருடைய பகுதியிலேயே பிரதானமாகக் காணப்பட்டன (8:30-32; லூக்கா 15:15, 16). கனம்பெற்ற யூதர் ஒருவர் இவற்றில் ஒன்றைக்கூடத் தொடமாட்டார். ஏற்பாடுகளுக்கு இடையிலான காலகட்டத்தில், செலூக்கிய சர்வாதிகாரியான அந்தியோகஸ் என்பவர், யூதர்களைப் பன்றியைப் பலி செலுத்தும்படியும் பன்றி மாம்சத்தை உண்ணும்படியும் கட்டாயப்படுத்தினார். இருப்பினும் யூதர்கள் அப்படிப்பட்ட இழிவான செயல்களைச் செய்வதற்கு மாறாக இறக்க மனவிருப்பமாக இருந்ததை அவர் கண்டறிந்தார்.[9] யூதர்கள் பன்றிகளை வளர்த்ததில்லை என்பதால், யூதருடைய நிலப்பகுதிகளில் வாழ்ந்த பன்றிகள், எந்தப் பொருளையும் உண்ணும் தோட்டி மிருகங்களாக, காட்டுத்தனமாக ஓடின (சங்கீதம் 80:13).*

*மிகவும் விலைமதிப்புள்ள முத்துக்களை, பன்றிகள் போன்ற தாழ்ந்த மிருகங்களிடத்தில் தூக்கி எறிதல் என்பது கற்பனை செய்தும் பார்க்க இயலாத செயலாக இருக்கும். பரிசுத்தமான உணவை நாய்களுக்குக் கொடுத்தல் என்ற முந்திய உருவகத்தைப் போன்றே, இவ்விரு விஷயங்களுமே உயர்வான ஒத்திசைவு உடையவையாகும் (காண்க நீதிமொழிகள் 11:22). முத்துக்களின் மதிப்பைப் பன்றிகள் அறியாது இருப்பதால், அவற்றைத் தங்கள் கால்களின்கீழ் அவைகள் மிதித்துப் போடும் (காண்க 5:13; எபிரெயர் 10:29). பன்றிகளுக்கு யாரேனும் முத்துக்களைக் கொடுக்க முயற்சி செய்தால், அந்த மிருகங்கள் பழிவாங்கும் உணர்வுடன் திரும்பி அந்த நபரைப் பீறிப்போடவும் கூடும்.*

*மீண்டுமாக, "பரிசுத்தமானது," "முத்துக்கள்" ஆகியவை இராஜ்யத்தின் நற்செய்தியைக் குறித்து நிற்கின்றன (காண்க 13:45, 46).[10] இந்த சந்தர்ப்பப்பொருளில், நாய்கள் மற்றும் பன்றிகள் என்பவை, புறஜாதியாரை*

*அல்ல ஆனால் தேவபக்தியற்றவர்களையே குறிக்கின்றன. இவைகள், மக்களினம் அல்லது நாடு என்பதைப் பொருட்படுத்தாமல், சுவிசேஷத்திற்கு வெறுப்பைக் கொண்டுள்ள எல்லா மக்களையும் குறிக்கின்றன. பரிசுத்தமானதை அவர்கள் வெறுப்புணர்வுடன் நடத்துவதால், செய்திக்குப் பாத்திரர்களாக அவர்கள் இருப்பதில்லை (காண்க நீதிமொழிகள் 9:7-9; 23:9).*

*பிற்பாடு இயேசு தமது சீஷர்களிடம், அவர்கள் ஒரு நகரத்திற்கோ அல்லது ஒரு வீட்டிற்கோ சென்று, அங்கு அவர்களின் செய்தி புறக்கணிக்கப்பட்டால், அவர்கள் "கால்களில் படிந்த தூசியை உதறிப்போடும்"படியும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மக்களைக் கண்டறியும்படி வேறொரு நகருக்கோ அல்லது வீட்டிற்கோ செல்லும்படியும் கூறினார் (10:13, 14). அவிசுவாசிகளான யூதர்களிடத்தில் வெறுப்பை அனுபவித்தபோதெல்லாம் பவுல், அவர்களை விட்டுவிட்டு ஏற்றுக்கொள்ளக் கூடிய புறஜாதியாரிடத்தில் செய்தியை எடுத்துச் சென்றார் (நடபடிகள் 13:45-52; 18:5-7; 28:23-28).*

## *ஜெபத்தில் விடாமுயற்சி (7:7-11)*

***[7]"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; [8]ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். [9]உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? [10]மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? [11]ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா!"***

*ஜெபம் என்ற தலைப்பிற்கு இயேசு திரும்பினார், இது அவரது பிரசங்கத்தின் முற்பகுதியில் கலந்துரையாடப்பட்டதாகும் (6:5-15). அவர் ஜெபித்தலுக்கான மூன்று புத்திமதிகளுடன் இதைத் தொடங்கினார்: "கேளுங்கள்," "தேடுங்கள்" மற்றும் "தட்டுங்கள்" (7:7, 8). இந்தக் கட்டளைகளைத் தொடர்ந்து, "அப்பம்" மற்றும் "மீன்" ஆகியவற்றிற்காக மகன் விடுத்த வேண்டுகோளுக்குத் தந்தையின் பதில் செயல் உள்ளடங்கிய இரு விவரிப்புகள் வருகின்றன (7:9, 10). ஜெபத்தின் மீதான அவரது விளக்கங்கள், குறைவானதில் இருந்து பெரியவற்றிற்குச் செல்லும் கருத்துடன் ("அதிக நிச்சயம் அல்லவா?") முடிகின்றன, இக்கருத்து பரலோக பிதாவின் அன்பை வலியுறுத்துகிறது.*

***வசனங்கள் 7, 8.** மூன்று வெவ்வேறு கட்டளைகளைக் கொண்டு, ஜெபத்தின் முக்கியத்துவத்தை இயேசு வலியுறுத்தினார். **கேளுங்கள்** என்பது ஜெபத்திற்கான சாதாரண குறிப்பாக உள்ளது (காண்க 21:22; மாற்கு 11:24; யோவான் 14:13, 14; 15:7, 16; 16:23, 24), அதே வேளையில் **தேடுங்கள்** மற்றும் **தட்டுங்கள்** ஆகியவை ஒப்புவமை வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன*

*(காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3:20).*[11] 7ம் வசனத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள நிகழ்கால கட்டளை வினைச்சொல்லானது, தொடர்ந்து நடைபெறும் செயலைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. JNT வேதாகமத்தில் "தொடர்ந்து கேளுங்கள் ... தொடர்ந்து தேடுங்கள் ... தொடர்ந்து தட்டுங்கள்" என்றுள்ளது.

"தேடுதல்" மற்றும் "தட்டுதல்" என்ற ஆய்வுக்கருத்துடன் தொடர்புடைய வகையில், ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருத்தல் பற்றிய, இயேசுவின் இரண்டு உவமைகளை லூக்கா பதிவுசெய்தார். லூக்கா 18:1-8 வசனப்பகுதி, அநீதியான ஒரு நியாயாதிபதியிடத்தில் நீதியை நாடிக்கொண்டிருந்து கடைசியில் தனது விடாமுயற்சிக்காகப் பலன் அளிக்கப்பட்ட ஒரு விதவையைச் சித்தரிக்கிறது. லூக்கா 11:5-8ல் ஒரு மனிதர், தமது வீட்டிற்குத் திடீரென்று வந்த தமது நண்பருக்குக் கொடுப்பதற்காக, அப்பங்கள் சிலவற்றைக் கடனாகப் பெற்றுக்கொள்வதற்காக, நள்ளிரவு வேளையில் தமது நண்பரின் வீட்டிற்கு வந்தார். அவரது விடாமுயற்சியினால், அவரது நண்பர் படுக்கையில் இருந்து எழுந்து வந்து அவருக்குத் தேவையானவற்றைக் கொடுத்தார்.

இயேசு, **ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்** என்று வாக்களித்தார். தேவன் நமது ஜெப வேண்டுகோள்களைக் குறித்து மனக்கசப்புக் கொள்வதில்லை, அல்லது அவர் அவற்றைப் புறக்கணிப்பதும் இல்லை. அவர் நமக்காக எப்போதும் கதவைத் திறக்கிறார் மற்றும் நமக்குத் தேவைப்படுபவற்றைத் தராமல் அவர் நம்மை ஒருக்காலும் அனுப்பி வைப்பதில்லை. யாக்கோபு, "யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவன்" என்று கூறினார் (யாக்கோபு 1:5).

***வசனங்கள் 9, 10.*** பூமிக்குரிய தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுடைய வேண்டுகோள்களுக்கு எவ்வாறு பதில் அளிக்கிறார்கள் என்பதைக் காண்பிக்க இரு விளக்கங்கள் பின்தொடருகின்றன. முதலில் இயேசு, **உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?** என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு "ஒருவரும் இல்லை!" என்பதே தன்னில் சாட்சியுள்ள பதிலாக இருக்கிறது. "அப்பம்" மற்றும் "கல்" ஆகியவை உருண்டை வடிவத்தில் உள்ளன என்பதே அவற்றிற்கு இடையிலான தொடர்பாகும். இந்த ஒப்பீடு, கற்களை அப்பங்களாக்கும்படி பிசாசினால் இயேசு கேட்டுக் கொள்ளப்பட்ட இடமான, வனாந்தரத்தில் அவருக்கு ஏற்பட்ட முதல் சோதனையிலும் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (4:3).

திரும்பக்கூறுதல் என்ற கலையைப் பயன்படுத்தி, இதேபோன்ற ஒரு கேள்வியை இயேசு கேட்டார்: **மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?** "இல்லை!" என்பதே திரும்பவும் ஒலிக்கும் பதிலாக மீண்டும் உள்ளது. இவ்வசனப்பகுதியை மேம்போக்காக வாசித்தலே, குழந்தைக்கு வலிவான புண்படுத்துதலை ஏற்படுத்தக் கூடிய அல்லது கொல்லக்கூடிய நஞ்சுள்ள பாம்பு ஒன்றைச் சிந்தனைக்குக் கொண்டுவருகிறது - மற்றும் இது சரியாகவே இருக்கலாம். *Ophis* என்ற வார்த்தை, புதிய ஏற்பாட்டில் பாம்புகளைக் குறிப்பிட்டது (மாற்கு 16:18; 1 கொரிந்தியர் 10:9). இருப்பினும், இது கலிலேயாக் கடலில் காணப்பட்ட ஈல் போன்ற மீனை

இவ்விடத்தில் குறிப்பிட்டிருக்கவும் சாத்தியம் உள்ளது.[12] பழங்காலக் கலாச்சாரங்கள் பலவற்றில், பாம்பு போன்ற மீன்களைப் பாம்புகள் என்றே அடையாளப்படுத்துதல் பொதுவான வழக்கமாக இருந்தது என்று எட்வின் ஃபர்மேஜ் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[13] விஷயம் இவ்வாறு இருந்தால், "பாம்பு" என்பது மேலே கூறப்பட்ட கல் - உண்ண இயலாத பொருள் - போன்றதாக மாத்திரம் இருந்திருக்கும். லேவியராகமம் 11:9-12 வசனப்பகுதி, சிறகும் செதில்களும் இல்லாத எந்த மீனையும் யூதர்கள் உண்ணுவதைத் தடைசெய்தது.

அப்பமும் மீன்களும், கலிலேயாக் கடலைச் சுற்றிலும் இருந்த மக்கள்கூட்டமான பகுதிகளில் மிகவும் சாதாரணமாக உண்ணப்பட்ட உணவைக் குறிக்கின்றன. ஐயாயிரம் பேர்களுக்கும் நாலாயிரம் பேர்களுக்கும் இயேசு அற்புதவிதமாக உணவளித்தபோது, அவர்களின் உணவு, அப்பமும் மீனும் கொண்டதாக இருந்தது (14:15-21; 15:32-38). லூக்கா சுவிசேஷ விபரம், இயேசு "அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?" என்றும் கூறினார் என்பதைக் கூடுதலாகச் சொல்கிறது (லூக்கா 11:12). தேள்கள் என்பவை "ஊரும் பிராணிகளில்" அசுத்தமான வகையைச் சேர்ந்தவையாக இருந்தன (லேவியராகமம் 11:29-31) மற்றும் இவைகள் அந்த அடிப்படையில் மாத்திரம், உணவாக உண்ணக் கூடாது என்று தடை செய்யப்பட்டிருந்தன. தேள்களின் ஒரு குறிப்பிட்ட வகையானது ஓடு போன்ற மேல்பகுதியைக் கொண்டு, அவைகள் சுருண்டு தூங்கும்போது, முட்டையைப் போன்றே இருந்தன. இவ்வகையான தேளை முட்டை என்று நினைத்து யாரேனும் எடுத்து அதை உண்பதற்கு ஆயத்தம் செய்தார் என்றால், அவர் கடுமையாகப் பாதிக்கப்படுவார்.

**வசனம் 11.** இயேசு தரவழைத்த முடிவு தெளிவானதாகவும் வல்லமை நிறைந்ததாகவும் இருக்கிறது: **ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?** தேவன் தமது மக்களிடத்தில் எப்போதுமே தாராளகுணம் உள்ளவராக இருக்கிறார் என்பதைச் செயல்விளக்கப்படுத்துவதற்கு, குறைவானதில் இருந்து பெரியதற்கு என்ற விவாதத்தை இயேசு பயன்படுத்தினார். இவ்வாறு செய்ததில் அவர், தமது உரையைக் கேட்டவர்களை "பொல்லாதவர்கள்" (*ponēros*) என்று குறிப்பிட்டார். இந்தப்பிரசங்கத்தில் எட்டுமுறைகள் (5:11, 37, 39, 45; 6:13, 23; 7:17, 18) காணப்படும் இவ்வார்த்தை, இவ்விடத்தில் முற்றிலும் "நல்லவராக" (19:17; காண்க 5:48) இருக்கிற தேவனுடன் ஒப்பிடுதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடன் ஒப்பிடுகையில், மிகச்சிறந்த பெற்றோர்களும்கூட பொல்லாதவர்களாக இருப்பதாகக் காண்பிக்கப்படுகின்றனர்.[14]

அன்புகாட்டும் எந்தப் பெற்றோரும், தனது பிள்ளை அப்பம் அல்லது மீனைக் கேட்கும்போது, அதற்கு கல்லையோ அல்லது பாம்பையோ கொடுக்கும் அளவுக்குக் கொடூரமாக இருக்கமாட்டார். நல்ல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மிகச்சிறந்தவற்றையே விரும்புகின்றனர். மனிதப்

*பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்ற விரும்புவதால், பரலோகத்தில் உள்ள நமது பிதா தமது பிள்ளைகளின் தேவைகளை நிச்சயமாக நிறைவேற்றுவார் என்று நாம் அறிகிறோம் (பிலிப்பியர் 4:19; யாக்கோபு 1:17; 1 பேதுரு 3:12; 5:7; 1 யோவான் 5:14, 15). தேவன் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கவே விரும்புகிறார். விசுவாசத்துடனும் தேவனுடைய சித்தத்தின்படியும் கேட்கிறவர்களுக்கு, அவற்றைச் செய்ய அவர் கொண்டுள்ள மனவிருப்பத்திற்கு, வேதவசனங்கள் எந்த வரையறையையும் அமைத்து வைப்பதில்லை.*

*இயேசுவின் மனிதரீதியான விவரிப்புகள் (அப்பமும் மீன்களும்) உலகம் சார்ந்தவையாக உள்ளன, மற்றும் "நன்மையானவைகள்" என்ற சொற்றொடரை, உலகப்பிரகாரமான வழியில் விளக்கி உரைத்தல் சுலபமானதாக உள்ளது. இருப்பினும், தேவன் தமது பிள்ளைகளுக்கு உடல்ரீதியான தேவைகளை அளிக்கும்போது (6:33), அவர் விசேஷமாக அவர்களின் ஆவிக்குரிய தேவைகளை அளிக்கிறார். "நன்மையானவைகளை" என்பதற்குப் பதில் லூக்கா 11:13ல் "பரிசுத்த ஆவியை" என்றுள்ளது. சீஷர்களின், கேட்டல், தேடுதல் மற்றும் தட்டுதல் ஆகியவை, இந்தப் பிரசங்கத்தில் காணப்படுகிற அறைகூவல் விடுக்கும் போதனைகளை நிறைவேற்ற, அவர்களுக்குத் தேவைப்படும் ஆவிக்குரிய வல்லமையுடன் குறிப்பாகத் தொடர்பு கொண்டிருக்கலாம் (காண்க ரோமர் 8).*

## *ஒரு தொகுப்புரை: பொன்விதி (7:12)*

***12ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.***

***வசனம் 12.*** *முன்பு கூறப்பட்டவற்றின் தொகுப்புரை என்ற வகையில் இயேசு, "பொன்விதி" என்று பரவலாக அறியப்பட்டுள்ளதான, மற்றவர்களுடன் நடந்துகொள்ளும் வகைபற்றிய வழிகாட்டு குறிப்பு ஒன்றைக் கொடுத்தார். இந்த அடிப்படைக் கொள்கையானது, மனிதர்கள் மத்தியில் தரப்பட்டுள்ளவற்றிலேயே மிகவும் உயர்வான ஒழுக்கநெறியாக, அவிசுவாசிகளால்கூட ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆசியா, கிரேக்க - ரோமானியம் மற்றும் யூதத்துவப் பின்னணியைக் கொண்ட சாதுக்கள், இதேபோன்ற புத்திமதிகளைக் கொடுத்துள்ளனர். இருப்பினும், அவர்களின் விதிகளில் பெரும்பான்மையானவை எதிர்மறையாக உரைக்கப்பட்டன.*

*சீன தத்துவஞானியான கன்ஃப்யூசியஸ் என்பவர், "உங்களுக்கு எவைகள் செய்யப்படுவதை நீங்கள் விரும்பவில்லையோ, அவைகளை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யாதீர்கள்" என்று கூறினார்.[15] கிரேக்கத் தத்துவஞானியான ஐசோகிரேட்டஸ் என்பவர், "நீங்கள் மற்றவர்களின் கைகளால் அனுபவிக்கும் விஷயங்களில் உங்களைக் கோபமூட்டுவது எதுவோ, அதை மற்றவர்களுக்கு நீங்கள் செய்யாதீர்கள்" என்று புத்திமதி கூறினார்.[16] கிரேக்க தத்துவஞானியான அரிஸ்டோட்டில் என்பவரிடம், நண்பர்களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டபோது, "அவர்கள்*

நம்மிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோமோ, அவ்வாறே நாமும் அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டும்" என்று பதில் அளித்தார்.[17] ஹில்லல் ரபீ அவர்கள், புறஜாதியில் இருந்து யூதமார்க்கத்து அமைந்த ஒருவரிடத்தில், "உங்களுக்கு வெறுப்புநிறைந்ததாக உள்ளது எதுவோ, அதை உங்கள் அயலாருக்குச் செய்யாதீர்கள்" என்று கூறினார்.[18] தள்ளுபடி ஆகமத்தில் உள்ள தோபித்தின் வரலாறு என்ற புத்தகம், "உனக்குப் பிடிக்காத எதையும் பிறருக்குச் செய்யாதே" என்று அறிவுரை கூறுகிறது.[19] மேலும் சீராக்கின் ஞானம் என்ற புத்தகம், "உனக்கு அடுத்திருப்பவரின் தேவைகளை, உன்னுடையவற்றைக் கொண்டே அறிந்துகொள்; எல்லாவற்றிலும் அடுத்திருப்பவர்களைப் பற்றிக் கருத்தாய் இரு" என்று கூறுகிறது.[20] அரிஸ்டியஸ் என்பவரின் கடிதம், "நீ செய்பவை எல்லாவற்றினாலும் பொல்லாங்கு உன்மீது வருவதை நீ விரும்பாது இரு, ஆனால் உனது குடிமக்களிடம் இதை நீ நடைமுறையில் செயல்படுத்தினால் (இது ஞானமான காரியமாயிருக்கும்) ஒவ்வொரு ஆசீர்வாதத்திலும் பங்கடைவாய்" என்று உரைக்கிறது.[21]

இயேசுவின் புத்திமதி நேர்மறையாக விளக்கப்பட்டுள்ளது, மற்றும் அதன் செயல்கள் (ஒருவரின் நண்பர்கள் போன்ற) எந்த ஒரு குறிப்பிட்ட குழுவுடனும் மட்டுப்படுத்தப் படுவதில்லை: **மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.**[22] இந்தக் கருத்தை இயேசு எதிர்மறையாக உரைத்திருப்பார் என்றால், "பொன்விதியானது ஒன்றும் செய்யாமலே திருப்திப்படுத்தப் பட்டிருக்கக் கூடும். நேர்மறையான வடிவமானது மற்றவர்களுக்கு நன்மை செய்யும் செயல் களை நோக்கி நம்மை இட்டுச் செல்கிறது; இது நமக்குச் செய்யப்படும்படி நாம் மதித்துப் பாராட்டும் விஷயங்கள் எல்லாவற்றையும் மற்றவர்களுக்குச் செய்யும்படி நம்மை அழைக்கிறது."[23] ஜேக் பி. லூயிஸ் அவர்கள், "விதியின் நேர்மறையான இந்த வடிவமானது, [நல்ல] சமாரியனுடைய செயல்களுக்கு) ஒப்பிடப்படக் கூடிய செயல்களைச் செய்யும்படி மனிதரைக் கட்டுவிக்கிறது என்று கூறினார் (லூக்கா 10:30)."[24]

பொன்விதியை இயேசு முன்வைத்தபோது, **நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனம்** ஆகியவற்றின் சாராம்சத்தைத் தொகுத்து உரைத்தாரேயன்றி அவர் ஒரு புதிய பிரமாணத்தைத் தரவில்லை. பிற்பாடு அவர், "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ... அன்புகூருவாயாக" (உபாகமம் 6:5) மற்றும் "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" (லேவியராகமம் 19:18) என்ற பழைய ஏற்பாட்டுக் கட்டளைகள் பற்றி, இதேபோன்ற ஒரு கூற்றைக் கூறினார். அவர், "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" என்று கூறினார் (22:40). ஹில்லல் ரபீ, பொன்விதியின் எதிர்மறைக் கூற்றைக் கொடுத்தபின்பு, "இதுவே நியாயப்பிரமாணம் முழுமையுமாக உள்ளது, எஞ்சிய மற்ற யாவும் விளக்கமாக உள்ளது" என்று கூறினார்.[25] இயேசுவினால் போதிக்கப்பட்டபடி, பொன்விதியானது "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்ற கட்டளையைப் போன்றதாகவே உள்ளது (காண்க ரோமர் 13:8-10; கலாத்தியர் 5:14).

**ஆதலால்** என்ற வார்த்தையைக் கொண்டு அறிமுகப்படுத்தப்படும் 12ம் வசனம், மலைப்பிரசங்கத்தின் தொகுப்புரையாகச் செயல்படலாம்.

நியாயப்பிரமாணமும் இயேசுவின் போதனைகளும், பொன்விதி என்ற உருப்பெருக்கி வழியே உற்றுநோக்கப்பட வேண்டும். "நியாயப் பிரமாணமும் தீர்க்க தரிசனங்களும்" என்ற சொற்றொடர், 5:17ல் உள்ள "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும்" என்ற சொற்றொடருக்கு இணையாக உள்ளது. இந்தக் குறிப்புகள், பிரசங்கத்தின் முதன்மைக் கருத்துப் பொருளுக்கு அடைப்புக்குறிகள் என்ற வகையில் குறிப்புகளாகச் செயல்படுகின்றன (5:17-7:12).

## இறுதிப் புத்திமதிகள் (7:13-27)

இந்தப் பிரசங்கத்தின் முடிவுப்பகுதியில் இயேசு, தமது போதனைக்குக் கீழ்ப்படியும்படி தம் சீஷர்களுக்குப் புத்திகூறினார். அவர்கள் தேர்ந்துகொள்ளக் கடமைப்பட்ட, நேர்மாறுகளின் வரிசை ஒன்றை அவர்களுக்கு முன்பாக அவர் அமைத்து வைத்தார்: வேறுபட்ட இரு வழிகள் (7:13, 14), மரங்களின் இரு பிரிவுகள் (7:15-20), பின்பற்றுவோர்களின் இரு வகைகள் (7:21-23) மற்றும் இரு வகையான கட்டிடம் கட்டுவோர் (7:24-27). R. T. ஃபிரான்ஸ் அவர்கள், "ஒவ்வொன்றும், உண்மையானது மற்றும் போலியானது ஆகியவற்றிற்கு இடையில் வேறுபாட்டை முன்வைக்கிறது, மற்றும் இந்த உண்மைத்தன்மை, சீஷரின் அறிக்கை செய்தலில் அல்ல, ஆனால் அவரது செயல்பாட்டிலேயே காணப்படுகிறது" என்று எழுதினார்.[26] சரியான பதில்செயலைச் செய்தல் என்பதில்தான் வலியுறுத்தம் உள்ளது. "ஏற்படுத்துதல்" அல்லது "செய்தல்" என்று வழக்கமாக மொழிபெயர்க்கப்படும் *poieō*, என்ற கிரேக்க வினைச்சொல், கீழ்ப்படிதல் பற்றிய இந்தப் பகுதியில் ஒன்பதுக்கும் அதிகமான முறைகள் காணப்படுகிறது.

### இரண்டு வெவ்வேறு வழிகள் (7:13, 14)

**[13]இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.**

**[14]ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.**

**வசனங்கள் 13, 14.** இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்கள் **இடுக்கமான வாசல்வழியாய்** உட்பிரவேசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இங்கு "இடுக்கமான" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள (*stenos*) கிரேக்க வார்த்தை, "திறப்பு ஒன்றிற்குள்ளாக ஒருவர் பிழியப்படுதல்" போன்று "மிகவும் கடினமானது" என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. மூடப்பட்ட கதவு பற்றிய தமது உவமையில் இயேசு, "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" என்று கூறினார் (லூக்கா 13:24). "பிரயாசப்படுங்கள்" என்பதற்கான (*agōnizomai*) கிரேக்கச் சொற்றொடர், "agonize" மற்றும் "anguish" என்ற வார்த்தைகளுக்கு ஆதாரமூலமாக உள்ளது. பரலோகத்தில் பிரவேசிக்க அதிகமான முயற்சி தேவைப்படுகிறது என்பதே மறைமுகமான கருத்தாக உள்ளது (காண்க 5:20; 19:24).

**உட்பிரவேசியுங்கள்** என்பதற்கு இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள (*eiselthate*) வார்த்தை ஒருமுறை மாத்திரம் செய்யப்படும் செயல் பற்றிய கட்டளை என்ற வகையில் உள்ளது, இது குறிப்பிட்ட செயலை வற்புறுத்துகிறது; இது ஒரு கட்டளையாக உள்ளது. இந்த வார்த்தைகளை இயேசு பேசியபோது, இவைகள் எச்சரிக்கை என்ற வகையில் அல்ல, ஆனால் புத்திமதி அல்லது அழைப்பு என்ற வகையிலேயே அர்த்தப்பட்டன. அவர், தம்மிடத்தில் வருகிற யாவரையும் வரவேற்றார்.

இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசிப்பவர்கள் **நெருக்கமான வழியாகவும்** பயணம் செல்வார்கள். "நெருக்கமான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*thlibō*) கிரேக்க வினைச்சொல், "அழுத்துதல்," "கட்டுப்படுத்துதல்" மற்றும் "துன்புறுத்துதல்" என்றும் அர்த்தப்படக் கூடும். இயேசுவின் சீஷர்கள் பயணம் மேற்கொள்ளும் சாலை, சிரமங்கள், இடர்ப்பாடுகள் மற்றும் துன்புறுத்தப்படுதல்கள் என்பவற்றினால்கூட நிரப்பப்பட்டிருக்கும். பலஸ்தீனத்தின் பழங்காலச் சாலைகள் இயேசுவின் உருவகத்திற்குப் பின்னணியாகப் பயன்பட்டன. ராபர்ட் H. குண்ட்ரீ அவர்கள், "சார்பளவில் சமதளமாக இருக்கும் கிராமப்பகுதி, பயணம் செய்ய அகலமான சாலைகளை அனுமதித்தது. ஆனால் மலைப்பிரதேசத்தில் இருந்த சாலைகளில் பயணம் செய்தல் மிகவும் கடினமாக இருந்தது" என்று குறிப்பிட்டார்.[27]

இயேசுவின் உருவகத்தில், இடுக்கமான வாசலும் நெருக்கமான வழியும், ஒன்றுடன் மற்றொன்று எவ்வாறு உறவுபடுகிறது? ஃபிரான்ஸ் "அவர்கள், 'இடுக்கமான வாசல்' என்பது, 'கடினமான வழியின்' தொடக்கத்திலா அல்லது முடிவிலா, எங்கிருக்கிறது? அல்லது கடினமான வழி என்பது, வாசல் வழியாகப் பார்க்கக்கூடிய வகையில் உள்ள, இரு உருவகங்களும் ஒன்றுகலந்த நிலையில் இருக்கின்றனவா?" என்று கேட்டார்.[28] இந்தக் கேள்விகளுக்குப் பதில் என்னவாக இருந்தாலும், இயேசுவின் கருத்து தெளிவாக உள்ளது. மக்கள், நித்திய **வாழ்வு** மற்றும் நித்திய அழிவு என்ற, பெரிதும் மாறுபட்ட இரு அடைவிடங்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய, வாழ்வின் மாற்று வழிகள் இரண்டில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.[29] இவ்விரண்டு பாதைகளில், ஏதேனும் ஒன்றை மாத்திரமே நாம் பின்பற்ற முடியும். ஒன்றைத் தேர்ந்துகொள்வதன் மூலம் நாம் இன்னொன்றைப் புறக்கணிக்கிறோம். இவைகள் இரு மாறுபட்ட இடங்களில் இருந்து இன்னொன்றுக்குச் செல்வதற்குக் குறுக்குப்பாதைகள் எதுவும் இருப்பதில்லை. எந்தச் சாலையில் நடப்பது மற்றும் நாம் சென்று சேர விரும்பும் அடைவிடம் எது என்பதை, இந்த வாழ்வில் நாம் முடிவு செய்ய வேண்டும். முடிவுசெய்தலை நாம் தவிர்த்தோம் என்றால், அது நெருக்கமான வழியாக நடக்காது இருத்தல் என்ற முடிவாக உள்ளது.

இயேசு தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், நெருக்கமான வழியே நடக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டார், ஏனெனில் இதற்கு மாற்றாக உள்ள வழியானது பரிதாபமான அழிவிற்கு வழிநடத்துவதாக உள்ளது: **கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது.** "விசாலம்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட (*euruchōros*) கிரேக்க வார்த்தை "போதிய இடப்பரப்புள்ள" என்று அர்த்தப்படுகிறது. இந்தப் பாதையானது, நிபந்தனைகளேயோ அல்லது கட்டுப்பாடுகளையோ கொண்டிருப்பதில்லை.

*இது ஒப்புவித்தல், ஒழுக்கநெறிகள் அல்லது ஆவிக்குரிய பக்குவத்தன்மை ஆகியவற்றை வேண்டிக்கேட்பதில்லை, ஆனால் மரணமும் அழிவுமே இதன் இறுதி வெகுமதியாக உள்ளது (ரோமர் 6:23). இது அகலமாகவும் அழைப்பு விடுப்பதாகவும் இருப்பதால், இது மரணத்திற்கு ஏதுவான பாதையாக இருந்தாலும், இதில் பயணம் செய்வதை* **அநேகர்** *தேர்ந்து கொள்கின்றனர். தேவனுடைய மக்கள் எப்போதுமே சிறுபான்மையினராகவே இருந்துள்ளனர் (காண்க ஆதியாகமம் 6:1-22).*

*இவ்வசனங்களைக் குறித்து டொனால்டு A. ஹேங்கர் அவர்கள், "இரண்டு வழிகள்" என்ற ஒப்புவமையானது, பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட சொல் லாட்சிக்கலைக் கருவியாக இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார், இதற்கு அவர் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்கள், சவக்கடல் சுருள்கள், ரபீத்துவ இலக்கியங்கள் மற்றும் அப்போஸ்தலிக்கப் பிதாக்களின் எழுத்துக்கள் ஆகியவற்றில் இருந்து உதாரணங்களைச் சுட்டிக்காண்பித்தார்.[30] பழைய ஏற்பாட்டில் மாத்திரம் பின்கண்டவை உள்ளன: தேவனுடைய மக்கள், "ஆசீர்வாதம்" மற்றும் "சாபம்" (உபாகமம் 11:26), "ஜீவனும் நன்மையும்" மற்றும் "மரணமும் தீமையும்" (உபாகமம் 30:15), "கர்த்தர்" மற்றும் "தங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்கள்" (யோசுவா 24:14, 15), "நீதி மற்றும் துன்மார்க்கம்" (சங்கீதம் 1:1-6) மற்றும் "ஜீவ வழி" மற்றும் "மரண வழி" (எரேமியா 21:8) ஆகியவற்றிற்கு இடையில் தேர்வுசெய்தல் என்பதை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி இருந்தன.*

### *மரங்களின் இருவகைகள் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் கனிகள் (7:15-20)*

***15கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.***

***16அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?***

***17அப்படியே நல்லமரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்டமரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.***

***18நல்ல மரம் கெட்ட கனிளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.***

***19நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்.***

***20ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.***

***வசனம் 15.*** *இரு வேறுபட்ட வழிகளில் இருந்து - நல்ல மரம் மற்றும் கெட்ட மரம் என்ற மரங்களின் இருவகைகளுக்கு இயேசு கடந்து சென்றார்.* ***கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு*** *எதிராக அவர் எச்சரிக்கை செய்தார். வரவிருந்த "கள்ளத்தீர்க்கதரிசிகள்" மக்களை "விசாலமான வழியில்" நடக்கும்படி அவர்களின் மதியை மயக்குவார்கள் என்பதே, முந்திய புத்திமதியுடன் இது*

கொண்டுள்ள தெளிவான தொடர்பாக உள்ளது.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கை, இஸ்ரவேல் மக்களின் தோற்றுவிப்பு காலம் தொடங்கி தரப்பட்டதாக உள்ளது. மோசே, "ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்" என்று கூறியபோது (உபாகமம் 18:22), மக்களிடையே இருக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளை அவர் அடையாளப்படுத்தினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தீர்க்கதரிசி என்று உரிமைகோரும் ஒரு நபர், உண்மையற்ற ஒரு முன்னுரைத்தலை வெளிப்படுத்தினால், அவர் அல்லது அவள் கள்ளத்தீர்க்தரிசி என்பதை வெளிப்படுத்துகிறார்.

இயேசுவினால் பேசப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகள் யார்? யூதமக்கள் கூட்டத்திற்கு இயேசு உரை நிகழ்த்தியதால், மேசியா என்று உரிமைகோரிய கள்ளத்தீர்க்கதரிசிகளை அவர் மனதில் கொண்டு இருந்திருக்கலாம். பிற்பாடு அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு, "அநேகங்கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் … . ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" என்று கூறினார் (24:11, 24). மேசியாவாக நடித்த இப்படிப்பட்டவர்கள் முதல் நூற்றாண்டில் எழும்பினும், இவர்கள் ரோமானியர்களைத் துரத்துவதற்காக இராணுவங்களைக் கூடச் சேர்த்தனர். இருப்பினும், இவர்களும் இவர்களின் படைகளும் தோல்வி அடைந்தபோது, இந்தத் தலைவர்கள் அழைக்கப்பட்டவர்கள் அல்ல மற்றும் இவர்கள் தேவனால் அபிஷேகம் பெற்றவர்களும் அல்ல என்பது தெளிவாயிற்று. இப்படிப்பட்ட நடிப்பாளர்களில் மூவரைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் குறிப்பிடுகிறது: தெயுதாஸ், கலிலேயனாகிய யூதாஸ் மற்றும் (பெயர் குறிப்பிடப்படாத) எகிப்தியன் (நடபடிகள் 5:36, 37; 21:38).[31]

இராஜ்யத்தை (சபையை) முன்னெதிர் நோக்கும்படி, இயேசு தமது சீஷர்களுக்குக் குறிப்பாகக் கட்டளை இட்டிருந்ததால், கிறிஸ்தவத்தில் கள்ளப் போதகர்களின் அபாயம் குறித்தும் அவர் முன்னுரைத்திருக்கக் கூடும். சபையின் தொடக்க நாட்களில், புதிய ஏற்பாட்டு விதிமுறைமை எழுதி முடிக்கப்படுவதற்கு முன்னர், சபைக்குழுமங்கள் நடப்படுதல் மற்றும் அவற்றின் மேம்பாடு ஆகியவற்றிற்கு, தீர்க்கதரிசன வரம் அத்தியாவசியமாக இருந்தது (1 கொரிந்தியர் 12:10, 28; 14:1-40). சபையானது "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல்" அதாவது, "கிறிஸ்துவைப் பற்றியும் அவரது சித்தத்தைப் பற்றியும், ஏவுதல் பெற்ற அவர்களது போதனையின் மீது கட்டப்பட்டது" (எபேசியர் 2:20). இருப்பினும், அவர்களைப்போலச் செய்யக் கள்ளப்போதகர்கள் நாடினர், இவர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களையும் கள்ளத்தீர்க்கதரிசனங்களையும் உட்புகுத்தினர். ஆகவே, பேசப்பட்ட செய்திகள் மதிப்பிடப்பட வேண்டியிருந்தன (1 கொரிந்தியர் 12:10). தெசலோனிக்கேயர்களுக்குப் பவுல், "ஆவியை அவித்துப்போடாதிருங்கள். தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்"

என்று அறிவுறுத்தினார் (1 தெசலோனிக்கேயர் 5:19-21).

சபையின் தொடக்க ஆண்டுகளில் கள்ளத் தீர்க்கதரிசிகள் இருந்தனர், மற்றும் பவுல் எபேசுவில் இருந்த சபையின் மூப்பர்களுக்கு "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" என்று கூறி எச்சரிக்கை செய்திருந்தார் (நடபடிகள் 20:29). பேதுருவும்கூட, "அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர் இருப்பார்கள்" என்று எச்சரிக்கை செய்திருந்தார் (2 பேதுரு 2:1). பேதுருவுக்கு நீண்ட நாட்களுக்குப் பின்பு எழுதியிருந்த அப்போஸ்தலரான யோவான், "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்த்ததரிசிகள் தோன்றியிருப்பதினால்" என்று கூறினார் (1 யோவான் 4:1). மேலும் யோவான், "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" என்றும் எழுதினார் (2 யோவான் 10, 11). அவர், கிறிஸ்து மாம்சத்தில் வந்திருந்தது இல்லை என்று போதித்தவர்களைப் பற்றிய திட்டவட்டமான குறிப்புகளை ஏற்படுத்தினார். கிறிஸ்தவத்தில் கள்ளத் தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் ஆகியோரின் பிரச்சனைகள், சபை தொடங்கியதில் இருந்து இன்று வரையிலும் பலுகிப்பெருகி மாத்திரமே உள்ளன.[32]

இந்தக் கள்ளப்போதகர் **ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள், உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்களாக** [இருப்பார்கள் என்று கூறினார்] **கள்ளத் தீர்க்கதரிசிகளின்** வஞ்சிக்கும் இயல்பு தெளிவாக உள்ளது. இந்தப்போதகர்கள், ஆடுகளாக அல்ல, மேய்ப்பர்களாக நபர்த்துவம் எடுத்து வருவார்கள். உண்மையான மேய்ப்பர்கள் போன்ற நடையில், ஆட்டுத்தோலைப் போர்த்து இவர்கள் வருவார்கள் என்று ஒப்புமை இவர்களைப் பற்றித் தெரிவிக்கிறது. இந்த உடையானது, ஆட்டுத்தோல் உட்பட, மயிராடைகளை அணிந்த பழங்காலத் தீர்க்கதரிசிகளின் வரிசையில் பின்தொடருகிறது (2 இராஜாக்கள் 1:8; சகரியா 13:4; மத்தேயு 3:4; எபிரெயர் 11:37).

இந்த வஞ்சகர்கள், ஆடுகளைப்பற்றி உண்மையாகவே அக்கறைகொண்ட, தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்களாக நடிக்கும் காரணத்தால், இவர்கள் விசேஷமாக அபாயமானவர்களாக இருந்தனர். இருப்பினும் மந்தையை அழித்தல், மூர்க்கமான ஓநாய்களைப் போல் மந்தையைப் பட்சித்தல் என்பதே இவர்களின் முழுநோக்கமாக இருந்தது (காண்க யோவான் 10:10, 12; நடபடிகள் 20:29; 2 கொரிந்தியர் 11:13-15; 2 தீமோத்தேயு 3:13). இவர்கள், தாங்கள் விசுவாசித்தவை பற்றி நேர்மை இல்லாதவர்களாகவும் சொந்த ஆதாயத்திற்காகத் தூண்டப்பட்டவர்களாகவும் இருந்தனர்.

**வசனம் 16.** இயேசு, **அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்** என்று அறிவித்தார். கள்ளத்தீர்க்கதரிதிகளை நாம் எவ்வாறு கண்டறிய முடியும்? செயல்விளைவில் இயேசு, "கனிகளை ஆய்வு செய்யும்படி" கூறினார். கனியானது அதை உண்டாக்கும் மரத்தின் வகையைப் பிரதிபலிக்கிறது. இயேசு, **திராட்சப்பழங்கள் முட்செடிகளில்** வளருவதில்லை மற்றும் **அத்திப்பழங்கள் முட்பூண்டுகளில்** வளருவதில்லை என்று கூறினார். மாறாக, திராட்சப்பழங்கள் முள்ளுகள் இல்லாத திராட்சக் கொடிகளிலும் அத்திப்பழங்கள்

மென்மையான பட்டைகளைக் கொண்டு அத்திமரங்களிலும் வளருகின்றன.

***வசனங்கள் 17, 18.*** இயேசு, ***அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைப் கொடுக்கமாட்டாது*** என்றும் கூடுதலாகக் கூறினார். ஹில் அவர்கள், "இவ்வசனங்கள் ஒரு கருத்தை வலியுறுத்துவதற்கான யூதத்துவ வழியை விவரிக்கின்றன: உரை நேர்மறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது (17), பின்பு எதிர்மறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று விளக்கப்படுத்தினார் (18)."[33] கள்ளத் தீர்க்கதரிசிகளின் கெட்ட கனி என்பது, அவர்களின் ஒழுக்கவீனமான வாழ்வுநடை அல்லது அவர்களால் போதிக்கப்பட்டவர்களின் மோசமான வாழ்வு ஆகியவற்றைக் குறிப்பிடச் சாத்தியக்கூறு உள்ளது.[34] அவர்களின் கள்ள போதனையும் உள்ளடக்கப்பட வேண்டும் (காண்க 12:31-37; லூக்கா 6:43-45). மரம் கெட்டதாக இருப்பதால் கனியும் கெட்டதாக உள்ளது.

***வசனங்கள் 19, 20.*** இயேசு, ***நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்*** என்று கூறி முடித்தார். அவரது வார்த்தைகள், யோவான் ஸ்நானனின் வார்த்தைகளைத் திரும்ப உரைக்கின்றன (காண்க 3:10ன் மீதான விளக்கங்கள்). கனிமரங்களை வளர்க்கும் மக்கள், மரங்களைத் தொடர்ந்து இலைகழித்து பலன்தராத கிளைகளைத் தரித்துப்போட வேண்டும். பலன்தரும் மரங்களுக்கு இடம் விடும்படி, பலன்தராத மரங்களை அவர்கள் வெட்டிப்போடவும் வேண்டும் (காண்க யோவான் 15:2, 6). அவ்வாறே கள்ளத் தீர்க்கதரிசிகளும் போதகர்களும் நியாயத்தீர்ப்பின் நாளில் பிரிக்கப்பட்டு நித்திய அக்கினியில் வீசி ஏறியப்படுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:10). அவர்கள் இப்போது தீர்ப்புக்குத் தப்பிக்கொள்வது போன்று தோன்றலாம், ஆனால் "அவர்களுக்கு விதிக்கப்பட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது" (2 பேதுரு 2:3). ***அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்*** என்பது வலியுறுத்தத்திற்காகத் திரும்பக் கூறப்பட்டுள்ளது.

### *இரண்டு வகையான சீஷர்கள் (7:21-23)*

***[21]பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.***

***[22]அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.***

***[23]அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.***

***வசனம் 21.*** இரண்டு வகையான பின்பற்றாளர்களைப் பற்றி நேரெதிராக ஒப்பிடுதலைக் கொண்டு இயேசு தொடர்ந்தார்: கீழ்ப்படிபவர்கள்

*மற்றும் கீழ்ப்படியாதவர்கள். அவரது வார்த்தைகள், சுய வஞ்சனையால் பாதிக்கப்பட்ட கள்ளத்தீர்க்தரிசிகள் என்ற ஆய்வுக்கருத்தைக் தொடர்ந்து கூறி இருக்க வாய்ப்புள்ளது. அவர்கள் தாங்கள் போதிப்பவர்களை மாத்திரம் அல்ல, ஆனால் முடிவில் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கின்றனர்.*

*கள்ளத் தீர்க்கதரிசிகள் கூட சில வேளைகளில் சத்தியத்தைப் பேசுகின்றனர் என்று இயேசு ஒப்புக் கொண்டார். இயேசுவை அவர்கள்,* ***கர்த்தாவே! கர்த்தாவே!*** *என்று உரைத்தலானது, அவர்கள் அவரது அதிகாரத்தையும் தெய்வீகத்துவத்தையும் அங்கீகரித்தலைக் குறித்தது. அவர்களின் அறிக்கைகள் "இயேசுகிறிஸ்து கர்த்தரென்று" தொடக்ககால சபையில் செய்யப்பட்ட அறிக்கைக்கு இணையாக இருந்தது (ரோமர் 10:9; 1 கொரிந்தியர் 12:3; பிலிப்பியர் 2:11). லூக்கா 6:46ல் இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" என்று கேட்டார். "ஆண்டவரே! ஆண்டவரே!" என்ற அறிக்கை மாத்திரம் தன்னிலே போதுமானதாக இருப்பது இல்லை. சுய-வஞ்சனையான அற்புதங்களை செய்பவர்கள் கூட, இந்த வார்த்தைகளைக் கொண்டு இயேசுவைக் கூப்பிடுகின்றனர்.* ***அவர்கள் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை.*** *தேவனுடைய* ***சித்தத்தின்படி*** *செய்கிறவர்களே அதில்* ***பிரவேசிப்பார்கள்*** *என்று இயேசு கூறினார். இரட்சிக்கப்பட்டிருக்க விரும்புபவர்கள் திட்டவட்டமான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்: அவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படியும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். இயேசு, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (யோவான் 14:15). பிற்பாடு யோவான் "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் ..." என்று எழுதினார் (1 யோவான் 5:3).*

***வசனம் 22.*** *இயேசு சித்தரித்த காட்சியில், கள்ளத் தீர்க்கதரிசிகள் (கீழ்ப்படியாத சீஷர்கள்), நியாயத்தீர்ப்பு நாளாகிய* ***அந்நாளில்***[35] *இயேசுவினிடத்தில் கணக்கு ஒப்புவிப்பார்கள்.*[36] ***தீர்க்கதரிசனம் உரைக்கும், பிசாசுகளைத் துரத்தும்*** *மற்றும்* ***அநேக அற்புதங்களைச் செய்யும்*** *கள்ளத்தீர்க்தரிசியின் திறன், இயேசுவினால் உறுதிப்படுத்தப்படவோ அல்லது மறுக்கப்படவோ இல்லை. இருப்பினும்,* ***செய்தோம் அல்லவா?*** *என்ற வார்த்தைகள், உடன்பாட்டுப் பதிலை முன்னெதிர் நோக்குகின்றன. அவ்வாறு செய்தனர் என்று குறைந்தபட்சம் அவர்கள் நினைத்தனர். அவர்கள், இயேசுவின்* ***நாமத்தினாலே*** *இந்த அற்புதங்களை உண்மையிலேயே நிகழ்த்தியிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. மாற்கு 9:38, 39ல், அப்போஸ்தலரான யோவான், சீஷர்களின் குழுவில் இல்லாத ஒருவர், இயேசுவின் நாமத்தினால் அசுத்த ஆவியைத் துரத்துவது பற்றி இயேசுவிடம் முறையிட்டார். நடபடிகள் 3:6 மற்றும் 9:34 ஆகிய வசனங்களில், அப்போஸ்தலர்கள் இயேசுவின் நாமத்தினாலே பேசி, வெற்றிகரமாகக் குணமாக்கினர். ஒரு சந்தர்ப்பத்தில், மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் இயேசுவின் நாமத்தைத் தங்கள் சொந்த ஆதாயத்திற்காகப் பயன்படுத்தினர், ஆனால் அவர்களின் திட்டம் முறியடிக்கப்பட்டது. அசுத்த ஆவி பிடித்திருந்த மனிதர் அவர்கள் மீது விழுந்து அவர்களை தாக்கி, அவர்களை நிர்வாணிகளாகவும் காயப்பட்டவர்களாகவும் ஆக்கிச் சென்றார் (நடபடிகள் 19:13-16).*

***வசனம் 23.*** *இங்கு நாம், கீழ்ப்படியாதவர்களை இயேசு நியாயந்தீர்க்கையில் அவரது தீர்ப்பைக் காணுகிறோம்.* ***சொல்லுவேன்*** *என்ற வார்த்தை இந்த சந்தர்ப்பப்பொருளில், சட்டப்பூர்வமான ஒரு அறிவித்தலைச் சுட்டிக்காண்பிக்கிறது. இந்த தனிநபர்கள், இயேசுவைப் பின்பற்றுபவர்களாகத் தங்களைக் கருதிக்கொண்டு பெரிய அற்புதங்களைச் செய்துகொண்டிருக்கையில், அவர்கள் உண்மையாக அவரது பின்பற்றாளர்களாக இருக்கவில்லை.*

*இயேசு அவர்களிடம்* ***நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை*** *என்று தெளிவாகக் கூறினார். புத்தியில்லாத ஐந்து கன்னிகைகளைப் பற்றிய அவரது உவமையில் இதே கருத்துணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது (25:12; காண்க லூக்கா 13:25). இந்தச் சொல்விளக்கத்தின் மூலம் இயேசு அர்த்தப்படுத்தியது என்ன? “நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை” என்ற அறிவிப்பு, புறக்கணித்தலின் சூத்திரமாக உள்ளது (காண்க 26:70, 72, 74). பவுல், “கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்” என்று உரைத்தார். பின்பு அவர் “கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவன்” என்று கூறினார் (2 தீமோத்தேயு 2:19).*

***அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்*** *என்ற வார்த்தைகள், சங்கீதம் 6:9ஐப் பிரதிபலிக்கின்றன. சங்கீதத்தில் இருந்து வரும் வார்த்தைகள், தற்போதய சந்தர்ப்பப் பொருளில் உள்ளது போன்று, பொல்லாங்கு செய்பவர்களைப் பார்த்து ஒரு நியாயாதிபதி பேசும் வார்த்தைகளாக இருப்பதற்கு மாறாக, துன்புறும் நீதிமான் தம்மைத் துன்புறுத்துபவர்களைப் பற்றிப் பேசும் வார்த்தைகளாக உள்ளன. “என்னைவிட்டு அகன்றுபோங்கள்” என்பது, கீழ்ப்படியாதவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருத்தல் என்ற தண்டனையை அனுபவித்தலைச் சுட்டிக்காண்பிக்கிறது (2 தெசலோனிக்கேயர் 1:9, 10; வெளிப்படுத்தின விசேஷம் 21:7, 8; 22:14, 15). இந்தப் பொய் ஊழியர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதாக உரிமைகோரினாலும், இவர்கள் தொடர்ந்து “அக்கிரமச் செய்கைக்காரர்களாகவே” உள்ளனர். கிரேக்க மொழியில், “செய்கை” என்ற வார்த்தை, நிகழ்கால வினையெச்சமாக உள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. அவர்கள் எண்ணற்ற நற்செயல்களைச் செய்வதாக உரிமைகோரிக்கொண்டாலும், அவர்கள் கீழ்ப்படியாத வாழ்வை வாழ்ந்தனர்.*

### *இரண்டு வகையான கட்டுவோர்கள் (7:24-27)*

***24ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கின்றவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.***

***25பெருமழை சொரிந்து, பெரும்வெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.***

***26நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.***

***27பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த***

***வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.***

***வசனம் 24.*** இருவகையான கேட்பவர்கள் (அல்லது கட்டுபவர்கள்) பற்றிய ஒரு உவமையுடன் இயேசு தமது பிரசங்கத்தை முடித்தார். இதில் அவர், ***நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு.*** இவைகளின்படி செய்கிறவன் எவனோ என்று இருமுறை பேசினார் (7:24, 26). கர்த்தருடைய வார்த்தைகள், மக்கள் தங்கள் பண்பைக் கட்டி எழுப்ப வேண்டிய அஸ்திபாரமாக உள்ளன. கேள்விப்படுதல் மாத்திரம் போதுமானதாக இருப்பதில்லை; ஒருவர் அவரது வார்த்தைகளின்படி ***செய்யவும் வேண்டும்.*** "கேட்குதல்" மாத்திரம் என்பதற்கு நேர்மாறாக "செய்தல்" என்பதன் முக்கியத்துவத்தை வேதாகமம் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது. "வசனத்தைக் கேட்கிறவராக" மாத்திரம் இருந்து "செய்கிறவராக" இராமற்போகிறவர் தம்மையே வஞ்சித்துக் கொள்வதாக யாக்கோபு கூறினார் (யாக்கோபு 1:22-25). வசனத்தின்படி செய்கிறவர்களே ஆசீர்வதிக்கப்படுவார்கள் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 1:3).

இயேசுவின் வசனத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களை அவர் ***கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு*** ஒப்பிட்டார். "கன்மலை" என்பது "பெரிய பாறை" அல்லது "திடமான அடிப்பாறை" (*petra*) என்பதாக உள்ளது. இவ்வகையான பாறையானது, உறுதியான, அசைக்க இயலாத மற்றும் பாதுகாப்பான அஸ்திபாரமாக அமைகிறது. ஞானமுள்ள மனிதரின் வீட்டின்மீது புயல்கள் மோதும்போது, அது உறுதியாக நிற்கிறது. பாறையின்மீது கட்டப்பட்டிருத்தல் என்பது இயேசுவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிதலுக்குச் சமமானதாக உள்ளது. நாம் நமது ஆவிக்குரிய வீடுகளை அவரது சத்தியம் என்ற படுகைப்பாறையின்மீது கட்டும்போது, நமக்கு எதிராக வாழ்வின் புயல்கள் வலிவாக மோதினாலும், நமது விசுவாசம் நிலைத்து மற்றும் உறுதியாக நிற்கும்.

***வசனம் 25.*** தொடர்ந்து இயேசு, ***பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது*** என்று கூறினார். இவ்விடத்தில் கிரேக்க மொழிப்பதிப்பு, சொல்விளையாடல் ஒன்றை (*prosepesan ... epesen*) சுட்டிக்காண்பிக்கிறது. உவமையின் இந்தப் பகுதியை, லியோன் மோரீஸ் அவர்கள் பின்வருமாறு மொழிபெயர்த்தார்: "வீட்டின்மீது காற்றுகள் *வீழ்ந்தன,* ஆனால் அது விழவில்லை."[37] இயேசுவின் உரைக்குப் பின்னணியைக் குறித்து மவுன்ஸ் அவர்கள், "இவ்வுருவகம் பலஸ்தீன நாட்டின் தட்பவெப்ப சூழ்நிலைகளில் இருந்து வருகிறது. ஆண்டின் பெரும்பகுதியில் இந்த நாடு உலர்ந்தே காணப்படும், ஆனால் இலையுதிர்காலத்து மழையைத் தொடர்ந்து, திடீரென்று பெய்யும் பெருமழையினால் ஏற்படும் தண்ணீர் வெள்ளம், கால்வாய்கள் வழியே பெருக்கெடுத்தோடி, தாங்கள் வழியில் இருக்கும் எல்லாவற்றையும் கொண்டுபோய்விடும்" என்று கூறினார்.[38] மலைப்பிரசங்கத்தை இயேசு முன்வைத்தபோது, அவர் கலிலேயாக் கடலுக்கு அருகாமையில் இருந்தார்; மற்றும் இந்தக் காட்சியமைவு, இந்த உவமைக்கான பின்னணிக்கு இன்னொரு சாத்தியக்கூறை அளித்திருக்கலாம். வில்க்கின்ஸ் அவர்கள் பின்வரும் கருத்தை முன்மொழிந்தார்:

*கலிலேயாக் கடலின் ஓரத்தில் சூழ்ந்திருக்கும் வண்டல் மண்ணானது, கோடைகால மாதங்களில் கடினமான மேற்பரப்பைக் கொண்டிருந்தது. ஆனால் ஞானத்துடன் வீடு கட்டுபவர் இப்படிப்பட்ட மேல்பகுதி சூழ்நிலைகளினால் முட்டாளாக்கப்பட மாட்டார். கீழே உள்ள பாறைப்பகுதியைக் கண்டுபிடிப்பதற்குச் சிலவேளைகளில் அவர், மேற்பரப்பில் இருந்து பத்து அடிவரையிலும்கூடத் தோண்டிப்பார்ப்பார், பின்பு அங்கே அவர் தமது வீட்டிற்கான அஸ்திபாரத்தை இடுவார் [லூக்கா 6:46-49]. குளிர்கால மழை வரும்போது, யோர்தான்நதியின் நிரம்பி வழியும் கரைகள் கடலுக்குள் பாய்ந்தோடி வரும்போது, வண்டல்மண் மேற்பரப்பில் கட்டப்பட்ட வீடுகள் உறுதியில்லாத அஸ்திபாரத்தைப் பெற்றிருக்கும்; ஆனால் கன்மலையின்மீது கட்டப்பட்ட வீடுகள் வெள்ளங்களை சமாளிக்கக் கூடியவையாக இருக்கும்.*[39]

***வசனங்கள் 26, 27.*** *இதற்கு நேர்மாறாக, இந்த உவமையின் வரும்* ***புத்தியில்லாத மனிதர், மணலின்மேல் கட்டினார்.*** *மணல் உறுதியற்ற தன்மை உடையது, இது தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும், மற்றும் இது வெள்ளத்தினால் சுலபமாக அடித்துச் செல்லப்படும். புத்தியில்லாத மனிதரின் வீட்டின்மீது புயல் அடிக்கும்போது,* ***அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது****. மக்கள் அடிக்கடி, “மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றுகளை” ஏற்றுக்கொள்வதினால் தங்கள் ஆவிக்குரிய வீடுகளை மணலின்மீது கட்டுகின்றனர் (எபேசியர் 4:14). அவர்களின் விசுவாசமானது, கருத்துக்கள், யூகங்கள் மற்றும் கட்டுக்கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது (காண்க 2 தீமோத்தேயு 4:1-4). நமது ஆவிக்குரிய வீடுகள் பரிசோதிக்கப்படும் என்று இயேசு தெளிவாகக் கூறினார். கன்மலையின்மீது கட்டப்பட்டவை நித்திய நியாயத்தீர்ப்பு என்ற பரிசோதனையில் நிலைத்து நிற்கும். எப்போதும் இடம்மாறிக் கொண்டிருக்கும் மணலின்மீது கட்டப்பட்டவை “அந்த நாளில்” நிலைநிற்கக் கூடாதவையாக இருக்கும் (சங்கீதம் 1:6; 127:1; மத்தேயு 15:13).*

## *மக்கள் கூட்டத்தின் திகைப்பு (7:28, 29)*

***28 இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப் போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால்,***
***29 ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.***

***வசனம் 28. இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது,*** *என்ற வார்த்தைகள் அல்லது இவற்றிற்குச் சமமான வார்த்தைகள், மத்தேயு சுவிசேஷத்தில் ஐந்து முறைகள் தோன்றுகின்றன (7:28; 11:1; 13:53; 19:1; 26:1), இவைகள் இயேசுவின் போதனைப் பகுதிகள் ஐந்தை முடித்து வைக்கின்றன. இந்தப் பிரசங்கம், அவரது முழுச் செய்தியும் எதைப்பற்றியது என்பது குறித்த அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவரது செய்தியின் எஞ்சியபாகம் முழுமையும் அவரது சொந்த ஊழியம் முழுவதிலும் எடுத்துரைக்கப்பட்டது.*

***வசனம் 29.*** *இந்தப்பிரசங்கத்தைக் கேட்ட மக்கள், இயேசுவின் வார்த்தைகளினால் திகைப்பு அடைந்தனர்.* ***அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தார்.*** *"அதிகாரம்" என்பதற்கான (exousia) கிரேக்க வார்த்தை, ஆட்சி செய்ய அல்லது ஆளுகை செலுத்த ஒரு நபர் கொண்டுள்ள அதிகாரம் அல்லது சட்டப்படியான உரிமை யைக் குறிக்கிறது (காண்க 8:9; 9:6; 10:1; 21:23). இயேசு தமது பிரதான கட்டளையில் இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார் (28:18). வேதபாரகர்கள் முற்கால யூதக்கல்வியாளர்களின் எழுத்துக்களில் இருந்து, நீண்ட வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பிப்பதன் மூலம் போதித்தனர். அவர்கள் தங்கள் முன்னோர்களின் கூற்று என்ற தாங்கும் முட்டு இன்றி கருத்துக்களை விளக்க அஞ்சினர். A. T. ராபர்ட்ஸன் அவர்கள், "இந்த உரைகளின் மாதிரிகள் மிஷ்னா மற்றும் கெமெரா ஆகிய நூல்களில் நமக்காகப் பாதுகாக்கப்பட்டுள்ளது, இவை இரண்டும் தொகுக்கப்பட்டபோது, யூதர்களின் தல்மூத் என்ற புத்தகம், மனிதகுல வரலாற்றில் கற்பனை செய்யப்படக் கூடிய ஒவ்வொரு பிரச்சனைக்கும், சாரமற்ற, சோர்வு உண்டாக்கும் இணைவற்ற கட்டளைகளைக் கொண்டதாக இருந்தது" என்று எழுதினார்.[40] யூத போதகர்களுக்கு நேர்மாறாக, இயேசு தமது ஜீவனுள்ள, சொந்த மற்றும் விவரிப்பான போதனைகளை, தேவனுடைய அதிகாரம் பெற்ற வார்த்தையாக முன்வைத்தார் (காண்க யோவான் 5:27; 10:18; 17:2). அவர் தமது போதனையைப் பின்தாங்க மனித அதிகாரம் எதுவும் தேவைப்பட்டவராக இருக்கவில்லை. இந்தப்பிரசங்கத்தில் அவரது அதிகாரத்துவம், "என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (5:18, 20, 22, 26, 28, 32, 34, 39, 44; 6:2, 5, 16, 25, 29) மற்றும் "நான் சொல்லிய இந்த வார்த்தைகளை" (7:24, 26) என்ற திறவுகோல் சொற்றொடர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

### ✧✧✧✧✧ *பாடங்கள்* ✧✧✧✧✧

## *"தீர்ப்பிடாதிருங்கள்" (7:1-5)*

*ஒருவர், இன்னொருவர் செய்வது போன்ற அல்லது அதைக் காட்டிலும் அதிகம் தீவிரமான பாவங்களில் தாம் ஈடுபட்டிருக்கும்போதே, மற்றவரைப் பாவத்திற்காக மாய்மாலமாகத் தீர்ப்பிடுதலை இயேசு கண்டனம் செய்தார். மவுன்ஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:*

> *மனித இயல்பு, நமது சொந்தத் தவறுகளைக் காட்டிலும் மற்றவர்களின் குறைபாடுகளின் மீது அதிக கவனம் செலுத்தும்படி நம்மைத் தூண்டுகிறது. நமது சொந்த செயல்களுக்கு ஏதேனும் ஒருவகையில் நடைமுறைப்படுத்தப்படாத மிக உயர்வான நீதியின் தர அளவையினுடைய அடிப்படையில் மற்றவர்களை மதிப்பீடு செய்ய நாம் சாய்கிறோம்.[41]*

*மற்றவர்களைப் பற்றிய நமது மதிப்பீடுகளில் நாம் நியாயமாக இருப்பதற்கு, பல வழிகாட்டு குறிப்புகளை நாம் பின்பற்றியாக வேண்டும். உலகத்தை மாற்ற ஒருவர் முயற்சி செய்வதற்கு முன் அவர் தன்னைத்தான் மாற்றிக் கொள்ள வேண்டும்.*

நாம், நமது சொந்த வாழ்வை மதிப்பீடு செய்தாக வேண்டும். நாம் மற்றவர்களிடத்தில் குற்றமாக காணும் அதே விஷயங்களை நாமே செய்கிறோமா என்று நம்மையே நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

நம்மைப் பற்றி மற்றவர்கள் விமர்சிக்கும்போது அதை நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் கூறுவதில் உள்ள சில உண்மைகள், நாம் மேன்மையான மக்கள் ஆவதற்கு உதவக்கூடும். இரும்பை இரும்பு கருக்கிடும் (நீதிமொழிகள் 27:17).

முதல் மனப்பதிவுகளை நாம் அதிகமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு சந்திப்பு என்பது, ஒரு நபரைப் பற்றி அறிவதற்கோ அல்லது புரிந்துகொள்வதற்கோ வழக்கமாகப் போதுமானதாக இருப்பதில்லை. சிலவேளைகளில் முதல் மனப்பதிவுகள் தவறானவையாக உள்ளன.

நாம் விரைவில் முடிவெடுத்துவிடக் கூடாது. மற்றவர்களைப் பற்றிய நமது முடிவுகள், வதந்திகளின் அடிப்படையில் அமையாது இருக்கும்படிக்கு, எல்லா உண்மைகளையும் சேகரித்து அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் மக்களை ஒன்றுபோல் தீர்ப்பிடும் வகையான மக்களாக இருக்கக் கூடாது. ஒரு நபரின் இனம், பால் அல்லது சமூகப்பொருளாதார நிலை என்பவற்றின் அடிப்படையில் அவரை அல்லது அவளைத் தீர்ப்பிடுதல் நியாயமானதல்ல.

மிகவும் அதிகமாக விமர்சிப்பதற்கு முன்னர் நாம் மற்ற மக்களின் சூழ்நிலைகள் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்த நபர் தனது வாழ்வில் சில கடினமான பிரச்சனைகளைக் கையாண்டு கொண்டிருக்ககூடும். ஒருவேளை நாம் அந்த நபரின் இடத்தில் இருந்தால் அதேபோன்று நடந்திருக்கக் கூடும்.

நாம் மற்றவர்களை எதிர்த்து நிற்கும்போது, நமது நோக்கங்களை மதிப்பீடு செய்ய வேண்டும். மற்ற மக்களின் ஆவிக்குரிய சூழ்நிலைகள் பற்றி நாம் அக்கறையாக இருக்கிறோமா (கலாத்தியர் 6:1-4), அல்லது அவர்களைக் காட்டிலும் நாம் மேன்மையானவர்கள் என்ற கருத்தை மாத்திரம் ஏற்படுத்த முயற்சி செய்கிறோமா?

முடிவுரை. இன்னொருவரைத் தீர்ப்பிட முயற்சி செய்யும் மாய்மாலக்காரர் பற்றிய இயேசுவின் விவரிப்பானது நமக்கு ஒரு எச்சரிக்கையாகச் செயல்படுகிறது.

டேவிட் ஸ்டீவர்ட்

## பூரணரான பிதா (7:7-11)

பூமிக்குரிய தந்தையர்கள், பூரணமற்றவர்களாகவும் பாவம் நிறைந்தவர்களாகவும் இருந்தபோதிலும், தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கின்றனர் என்று இயேசு சுட்டிக் காண்பித்தார். பூமிக்குரிய தந்தையர்களை உற்றுநோக்குதல் மூலம் நாம், பரலோகத்தில் உள்ள பிதாவின் அன்பையும் ஜெபத்தில் அவருடன் நமது உறவையும் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

இன்றைய நாட்களில், பூமிக்குரிய தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் அதிக ஆற்றலைச் செலவிடுகின்றனர். அவர்கள், உணவு உடை மற்றும் உறைவிடம் உட்பட, வாழ்வின்

அடிப்படைத் தேவைகளைக் கொண்டிருப்பதை அந்தப் பெற்றோர்கள் உறுதிப்படுத்திக்கொள்கின்றனர். இதற்கும் அதிகமாக, தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி மூலமாக புத்திக்கூர்மை மேம்பாடு அடைய உதவுகின்றனர். அவர்களின் வீட்டுப்பாடம் மற்றும் விசேஷ பாடத்திட்டப் பணியில் இவர்கள் உதவிசெய்து, பள்ளிக்குழுக்களிலும் சங்கங்களிலும் பணிசெய்து, அவர்களின் புத்தகங்கள் மற்றும் தனிப்பயிற்சி ஆகியவற்றிற்குப் பணம் செலுத்துகின்றனர். இவர்கள் தங்கள் பிள்ளைகள் விளையாட்டுத்திறன் பெற உதவுகின்றனர், வீட்டின் பின்புறம் உள்ள மைதானத்தில் பந்து விளையாட்டில் அவர்களுடன் பல மணிகளைச் செலவிடுகின்றனர். தந்தையர்கள் தங்கள் பிள்ளைகள் ஆவிக்குரிய வகையில் மேம்பாடு அடைவதற்காக, அவர்களுக்கு வேதாகமத்தை வாசித்துக் காண்பிக்கின்றனர், அவர்களுடன் ஜெபிக்கின்றனர், கிறிஸ்தவ வாழ்வை மாதிரியாகக் காண்பிக்கின்றனர், அவர்களை ஆராதனைக்கு அழைத்துச் செல்கின்றனர் மற்றும் அவர்களுக்கு வேதாகம வகுப்புகளில் போதிக்கின்றனர். தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இவை எல்லாவற்றையும் செய்கின்றனர் என்றால், பரலோகத்தில் உள்ள பிதா தமது பிள்ளைகளுக்குப் பயன்படும்படி எவ்வளவு அதிகம் செய்யமாட்டார்?

பூமிக்குரிய பிதாக்களைப் போல், நமது பரலோகத்தின் பிதாவும், நாம் கேட்பதற்கு முன்னரே, பெரியவையும் சிறியவையுமான நமது கவலைகள் மற்றும் தேவைகளைப் பற்றி அக்கறை கொள்கிறார். சிலவேளைகளில் அவர், வாழ்வின் சிரமங்களுடன் போராட நம்மை அனுமதிக்கிறார், அது நமது சொந்த நன்மைக்கும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் அது நல்லது என்று அவர் அறிந்திருக்கிறார். பல வேளைகளில் அவர், நாம் கேட்பதற்கு முன்னரே நமக்குத் தேவையானவற்றைத் தருகிறார், மற்றும் நாம் அவருக்கு நன்றி செலுத்த மறந்தாலும், தொடர்ந்து அவ்வாறு செய்கிறார். மற்ற வேளைகளில் அவர், நாம் அவர்மீது அதிக நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதற்காகவும் அவரைச் சார்ந்திருக்க வேண்டியதை நாம் உணர்ந்தறிய வேண்டும் என்பதற்காகவும் நாம் அவரிடம் கேட்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நமது பிதாவானவர், பொறுப்பற்ற வகையில் நாம் கையாளும் ஒரு ஆசீர்வாதத்தை நம்மை விட்டு எடுத்துப்போடலாம். இருப்பினும் பூமிக்குரிய தந்தையர்கள் போலின்றி, நமது பரலோக பிதா பூரணமானவராக இருக்கிறார் மற்றும் நம்மைக் கவனித்துக் கொள்வதற்கு எல்லையற்ற ஆதாரமூலங்களைக் கொண்டுள்ளார்.

டேவிட் ஸ்டீவர்ட்

## பொன்விதி (7:12)

"பொன் விதி" என்று அறியப்பட்டுள்ள விதியில் இயேசு, "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்று அறிவுறுத்தினார் (7:12). நமது அன்றாட வாழ்வில், இந்த போதனைக்கான நடைமுறைப் பயன்பாடுகள் பலவற்றை நாம் காண முடியும்.

முதலாவது, அவரது கூற்றின் எளிமைத்தன்மையைக் கவனியுங்கள். இது எவரொருவரும் கீழ்ப்படியப் போதுமான அளவு எளிமையானதாக உள்ளது. நாம் மற்றவர்களை நடத்தும் வகைக்கு, இது நம்மீது தனிப்பட்ட வகையில் பொறுப்பை வைக்கிறது, மற்றும் இது அவர்கள் நம்மை நடத்தும்

விதத்தினால் தீர்மானிக்கப்படுவதில்லை. அவர்களிடம் நாம், "நீங்கள் என்னை எவ்வாறு நடத்தினாலும் பரவாயில்லை, நான் உங்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்துவேன், நீங்கள் என்னை எவ்வாறு நடத்த நான் விரும்புகிறேனோ, அவ்வாறே உங்களை நடத்துவேன்" என்று சாராம்சமாகக் கூறுகிறோம்.

இரண்டாவது, இந்தக்கூற்று "எவைகளை ... அவைகளை" என்று கூறுவதால், எந்த ஒன்றையும் அல்லது எவரொருவரையும் இது விலக்கி வைப்பதில்லை. நாம் பெறக்கூடிய எந்தவிதமான நடக்கையும் அல்லது எந்த நபரும் விடப்படுவதில்லை; இது நம்மை வெறுக்கிற மற்றும் நம்மைத் தவறாக நடத்துகிற யாவரையும்கூட உள்ளடக்குகிறது. நமது விரோதிகளைக் கூட நாம் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கு, நமது கர்த்தர் உதாரணத்தை அமைத்து வைத்தார் (லூக்கா 23:34; 1 பேதுரு 2:21).

மூன்றாவது, இந்த கூற்று ஒரு கருத்துரை என்பதைக் காட்டிலும் மேலானதாக உள்ளது. இது, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கொடுத்த வலிவார்ந்த அறிவிப்பாக, நடக்கைக்கான பின்பற்ற வேண்டிய விதியாக உள்ளது. இதனால் இந்த விதியை வேறு எந்த விதமாகவும் புரிந்துகொள்ளுதல் சாத்தியமற்றதாக உள்ளது. இது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், இந்தக் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாக உள்ளது.

## வாழ்வதற்கான விதி (7:12)

மக்கள் பொன்விதியின்படி வாழ்வார்கள் என்றால், நமது நாட்கள், மற்றவர்களுடன் நாம் நடந்துகொள்ளும் வகையில் நேர்மையும் தயவும் நிரம்பியவைகளாக இருக்கும். இருப்பினும், மக்கள் அடிப்படையாகப் பின்வரும் ஏழு விதிகளில் ஒன்றின்படி வாழ்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது:

1. *சகதி விதி* என்பது இவையாவற்றிலும் மிகவும் கீழானதாக உள்ளது. இது சுயநலமான மற்றும் கீர்த்தியற்ற வாழ்வு நடையாக உள்ளது. சாக்கடை போன்ற இந்தத் தத்துவத்தை நடைமுறைப்படுத்துபவர்கள், மற்றவர்களை ஆளுவார்கள் அல்லது அழிப்பார்கள்.

2. *களிமண் விதி* என்பது "அனுபவிக்கும் நபர்," இன்பம் துய்க்கும், பொருளாதாய வாழ்வுநடையாக உள்ளது. இது எப்பிக்கூரர்களின் தத்துவமாக இருந்தது - "புசிப்போம் குடிப்போம் களிப்பாயிருப்போம், ஏனெனில் நாளை நாம் இறப்போம்."

3. *இரும்பு விதி* என்பது "பலமே எல்லாவற்றையும் சரியாக்குகிறது" என்பதன் விதியாக உள்ளது. இது நல்ல சமாரியன் என்ற இயேசுவின் உவமையில், பயணியை அடித்து வழிப்பறி செய்தவர்களின் தத்துவமாக இருந்தது.

4. *வெண்கல விதி* என்பது பதிலுக்குப்பதில் செய்யும் விதியாக உள்ளது: "மற்றவர்கள் உங்களை நடத்துவது போன்று நீங்கள் அவர்களை நடத்துங்கள்"; "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்." இது "சட்டப்பூர்வமான விதி" என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

5. *வெள்ளி விதி* என்பது "எதிர்மறை நன்மை"யின் விதியாக உள்ளது. இந்த விதிப்படி வாழ்பவர்கள் எவரொருவரையும் ஒருக்காலும் துன்புறுத்துவதில்லை, ஆனால் அவர்கள் எவரொருவருக்கும் எந்த நன்மையும் செய்வதும் இல்லை.

6. *பொன்பூச்சு விதி* என்பது பொன்விதியின் மறுதலையாக உள்ளது: “மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய நீங்கள் விரும்புவதில்லையோ, அவைகளே நீங்களும் அவர்களுக்குச் செய்யாதிருங்கள்.” இந்த விதியை கடைப்பிடிக்க ஒரு நபர் தேவபக்தியுள்ளவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

7. *பொன் விதி* என்பது இந்த விதிகளில் கடைசியானதாக உள்ளது. கிறிஸ்தவர் அல்லாதவர்களாலும் இது ஒழுக்கத்தின் உயர்நெறியாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஹெர்பெர்ட் ஹூவர் என்பவர் அமெரிக்கா ஐக்கியநாட்டின்ஜனாதிபதியாகஇருக்கையில், “மனிதபலவீனத்தின்காரணமாக, பொன்விதியானது அன்றாடம் தனது மீறுதல்களைக் கொண்டுள்ளது, ஆனால் இந்த மாபெரும் கொள்கையானது, பொது நன்மையை இலக்காகக் கொண்டது, இது நாம் வாழும் இந்த நவீன உலகத்தின் எல்லா சக்திகளையும் ஊடுருவி அவற்றை மிகவும் ஆழமாக மாற்றி அமைக்கிறது” என்று கூறினார்.[42] உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் இந்த விதியை நடைமுறைப்படுத்தச் செய்தல் என்பது சாத்தியமற்றதாக இருக்கலாம்; ஆனால் இயேசுவை விசுவாசிப்பதாக உரிமை கோருபவர்கள் மாத்திரமே இதைப் பின்பற்றுவார்கள் என்றால், அது என்ன ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்![43]

## தேர்வுசெய்தல் (7:13-27)

தேர்வுசெய்தல்களை நாம் அன்றாடம் எதிர்கொள்கிறோம். சிலவேளைகளில் நாம், நல்லதற்கும் மிகநல்லதற்கும் இடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்கிறோம். மற்ற வேளைகளில் நாம், தீமையான இரண்டு விஷயங்களில் குறைவான தீமையுடைய ஒன்றைத் தேர்ந்து கொள்கிறோம். தற்போதய வசனப் பகுதியில், தேர்ந்துகொள்ளுதல்கள் என்பவை நன்மை மற்றும் தீமை என்ற இரண்டில் ஒன்றாக உள்ளது என்பது தெளிவு. நாம் பின்வருபவற்றிற்கு இடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்:

1. இடுக்கமான வழி அல்லது விசாலமான வழியில் நடத்தல் (7:13, 14);
2. நல்ல கனி கொடுத்தல் அல்லது கெட்ட கனி கொடுத்தல் (7:15-20);
3. கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல் (7:21-23);
4. கன்மலை மீது அல்லது மணல் மீது கட்டுதல் (7:24-27).

## சரியான பாதையைத் தேர்ந்துகொள்ளுதல் (7:13, 14)

இவ்வசனங்களில் இயேசு, இரு வெவ்வேறு அடைவிடங்களுக்கு வழிநடத்தும், வாழ்வின் இரண்டு பாதைகளுக்கு இடையில் தேர்ந்து கொள்ளுதலை விவரிக்க, பாதையின் உருவகத்தைப் பயன்படுத்தினார். நடப்பதற்கு இவ்விரு பாதைகளில் எதைத் தேர்ந்துகொள்கிறோம் என்பது முற்றிலும் நமக்கு விடப்பட்டுள்ளது. படைப்பின் தொடக்கத்தில் இருந்தே - ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரில் இருந்தே - தேவன் மக்களை அவர்களே தங்கள் சொந்தமாகத் தேர்வுசெய்து கொள்ளுதலை

ஏற்படுத்திக்கொள்ளும்படி அனுமதித்து இருக்கிறார்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது அடிக்கடி, ஒரு "வழி" என்ற வகையில் விவரிக்கப்படுகிறது. உண்மையில் அது, தொடக்ககால சபை அறியப்பட்டிருந்த பெயர்களில் ஒன்றாக உள்ளது (நடபடிகள் 9:2; 24:14). சங்கீதக்காரர் "நீதிமான்களின் வழி" மற்றும் "துன்மார்க்கரின் வழி" ஆகியவற்றிற்கு இடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டியதைப் பற்றி விவரித்தார் (சங்கீதம் 1:1-6). கிறிஸ்தவ யுகத்தின் வருகையைச் சுட்டிக்காண்பித்த தீர்க்கதரிசனம் ஒன்றில் ஏசாயா பின்வருமாறு எழுதினார்:

> அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்;
> அது பரிசுத்த வழி என்னப்படும்;
> தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை;
> அந்த வழியில் நடக்கிறவர்கள்
> பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை (ஏசாயா 35:8).

ஆவிக்குரிய வகையில் இளைப்படைதலை வெற்றிகொள்ளத் தமது வாசகர்களை ஊக்குவிக்க எழுதியவரான, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, ... உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்" என்று கூறினார் (எபிரெயர் 12:12, 13).

இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டிற்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில், மோசே ஒரு பிரியாவிடை உரை கொடுப்பதற்காக மக்களை ஒன்றுகூட்டி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு அவர்களுடன் தாம் செல்லப்போவதில்லை என்று தகவல் தெரிவித்தார் (உபாகமம் 31:2). இந்தக் கடைசிப் பேருரையில் அவர், தேவனுக்கு அவர்கள் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்க வேண்டும் என்ற உணர்வூட்டும் வேண்டுகோளை விடுத்தார் (உபாகமம் 30:19).

இதே போன்று யோசுவாவும் தமது மரணத்திற்குச் சற்று முன்னர், பின்வருமாறு கூறி இஸ்ரவேல் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்:

> ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள். கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் (யோசுவா 24:14, 15; NIV).

ஏறக்குறைய வடக்கு இராஜ்யம் முற்றிலுமாக பாகால் வணக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கையில், பாகாலின் தீர்க்கதரிசிகளைக் கர்மேல் மலையின்மீது எலியா சந்தித்தார். அவர் இஸ்ரவேல் மக்களின் மார்க்கரீதியான

*சமரசத்தை மறுத்துரைத்து, “நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்? கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்” என்று கூறினார் (1 இராஜாக்கள் 18:21).*

*யூதாமக்களுக்கு முன்னால் இருந்த தேர்வுசெய்தலை அவர்களுக்கு எரேமியா நினைவூட்டினார்: எருசலேமிலேயே இருந்து அதனுடன் அழிக்கப்படுதல் அல்லது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நெருங்கிக் கொண்டு இருந்ததால், அங்கிருந்து ஓடுதல். அவர், “இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும் மரணவழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” என்று எழுதினார் (எரேமியா 21:8).*

*மக்கள் தேர்ந்து கொள்வதற்கு இரு விஷயங்கள் மாத்திரமே இருப்பதாக, தொடக்கத்தில் இருந்தே தேவன் தெளிவாகக் கூறியிருக்கிறார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதையோ அல்லது அவருக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதையோ தேர்ந்து கொள்ளலாம். தேவனிடத்தில் சேருவதற்கு பல வழிகள் அல்ல ஆனால் ஒரே வழிதான் உள்ளது (யோவான் 14:6). பரலோகத்திற்கு வழிநடத்தும் சாலைகள் பல இருப்பதில்லை; ஒன்றே ஒன்றுதான் உள்ளது (7:14). உண்மையான தேவபக்தியையோ அல்லது பொய்யான தேவபக்தியையோ நாம் தேர்ந்துகொண்டாகவேண்டும் (15:9). மலைப்பிரசங்கம் என்பது, நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும் தேவனுடைய நீதி மற்றும் நித்திய மரணத்திற்கு வழிநடத்தும் வேதபாரகர் பரிசேயர் ஆகியோரின் மாய்மாலம் ஆகியவற்றிற்கு இடையில் நேரெதிர் ஒப்பீடாக உள்ளது (5:20).*

## நெருக்கமான வழியும் விசாலமான வழியும் *(7:13, 14)*

*“விசாலமான” வழி என்பது சகிப்புத்தன்மையுடன் சமமாக்கப் பட்டுள்ளது. எந்தக் காரணத்திற்காவது சகிப்புத்தன்மை இல்லாதிருப்பது பொல்லாத குணமாகும் என்று மக்களில் பலர் நம்புகின்றனர். சிலவேளைகளில் சகிப்புத்தன்மை இல்லாதிருத்தல் மோசமானதாக உள்ளது என்பது நிச்சயம்; ஆனால் தேவன் தூஷிக்கப்படும்போது, சத்தியம் தாக்கப்படும்போது அல்லது தேவனுடைய வசனத்திற்குப் பதிலாக (மக்களின்) கருத்துக்கள் ஏற்படுத்தப்படும்போது, சகிப்புத்தன்மை இல்லாதிருத்தல் என்பது சரியானதாகவே உள்ளது. நாம் அற்பமான ஆவிஉடையவர்களாவோ அல்லது வெறுப்பு நிறைந்தவர்களாகவோ இருக்கக் கூடாது, ஆனால் வேதாகமம் போதிக்கும் விஷயத்திற்காக உறுதியாக நிலைநிற்கவும், தவறான நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை ஏற்க மறுக்கவும் வேண்டும். மற்ற தேவர்கள் பற்றி (4:10), பிரிவுபட்ட பற்றுறுதி பற்றி (12:30) மற்றும் தேவனிடத்தில் சேர வேறு வழிகளைப் போதிப்பவர்கள் பற்றி (யோவான் 10:1-10; 14:6) இயேசு சகிப்புத்தன்மை இல்லாதிருந்தார்.*

*தேவனுடைய வழி நெருக்கமானதாக உள்ளது, ஏனெனில் அது சத்தியம் மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றின் வழியாக உள்ளது. “விசாலமான சிந்தை” கொண்டிருத்தல் என்பது விரும்பத்தக்க பண்பாக இருக்கிறது என்பது போன்ற வகையில், கிறிஸ்தவர்கள் அடிக்கடி “குறுகிய சிந்தை” கொண்டவர்கள் என்று*

அழைக்கப்பட்டுள்ளனர். இவ்வசனப் பகுதியில் இயேசு, இதற்கு மிகச்சரியாக எதிரான கருத்தைப் பரிந்துரைத்தார். "விசாலமான சிந்தை" கொண்டிருத்தல் நல்லதல்ல என்றும் "குறுகிய சிந்தை" கொண்டிருத்தல் அவசியமானதாக உள்ளது என்றும் அவர் கூறினார். "விசாலமான சிந்தை" கொண்டிருத்தல் என்பது "திறந்த மனம்" கொண்டிருத்தல் என்பது போல் அல்ல. "திறந்த மனம்" கொண்டிருத்தல் என்பது நல்லது, ஏனெனில் அது சத்தியத்தை நாடவும் புரிந்துகொள்ளவும் உதவுகிறது, இதற்கு நேர்மாறாக, விசாலமான சிந்தை என்பது, எதிர்க்கருத்துக்கள் எதையும், ஒழுக்கம் அல்லது மாறுபட்ட வாழ்வுநடை என்ற எதையும் ஏற்றுக்கொள்ளுதல் என்று அர்த்தப்படுகிறது. இதனால்தான், நாம் இந்த விசாலமான வழியில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று இயேசு எச்சரித்தார்.

இயேசு, "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்"; "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று கூறினார் (யோவான் 8:24, 32). மேலும் அவர், "என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" என்றும் கூறினார் (15:13). "வேற்றுமையான உபதேசங்களையும் போதியாதபடிக்கு ... சிலருக்குக் கட்டளையிடும்"படியும் (1 தீமோத்தேயு 1:3), "உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" (1 தீமோத்தேயு 4:16) என்றும் தீமோத்தேயுவைப் பவுல் வேண்டிக்கொண்டார். நித்தியஜீவனுக்குச் செல்லும் வழி மிகவும் நெருக்கமானதாக உள்ளது, ஒருசிலரே அதைக் கண்டு பிடிக்கின்றனர்.

## *கர்த்தாவே! கர்த்தாவே! (7:21-23)*

மக்களில் சிலர், தாங்கள் பிதாவின் சித்தத்தின்படி செய்திருக்கவில்லை என்பதை நியாயத்தீர்ப்பு நாளில் கண்டறிதல் என்பது எவ்வளவு பரிதாபகரமானதாக இருக்கும்! ஒரு நபர் உண்மையான கிறிஸ்தவ வாழ்வை வாழ்கிறார் என்பதை அவர் எவ்வாறு நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்? பவுல், "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்" என்று எழுதினார் (2 கொரிந்தியர்கள் 13:5). நமது வாழ்வில் கிறிஸ்தவ கிருபைகளைக் கூட்டுதல் மூலம் நமது "அழைப்பு" "உறுதிப்படுத்தப்பட" முடியும் என்பதைப் பேதுரு தெளிவாக்கினார் (2 பேதுரு 1:5-11).

---

குறிப்புகள்

[1]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 76.[2]Mishnah *Sotah* 1.7; காண்க Talmud *Shabbath* 127b. [3]Michael J.Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*,

ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 50. [4]Talmud *Rosh ha-Shanah* 16b. [5]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 146; *காண்க Leviticus Rabbah* 29.3. [6]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 241. [7]*காண்க* Talmud *Arakhin* 16b; *Baba Bathra* 15b. [8]Talmud *Baba Metzia* 59b. [9]1 Maccabees 1:16, 41, 42, 47; 2 Maccabees 6:18-7:42. [10]*தல்மூத் என்ற புத்தகத்தில், முக்கியமான உரையும் "முத்துக்கள்" என்பதைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.* (*Kiddushin* 39b.)

[11]*"தட்டுதல்" என்பது, தல்மூத் புத்தகத்தில் "ஜெபம்" என்பதற்கு ஒப்புவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது மொர்தேகாய் "இரக்கத்தின் கதவுகளைத் தட்டினார் மற்றும் அவருக்கு அவைகள் திறக்கப்பட்டன" என்று கூறுகிறது.* (*Megillah* 12b.) [12]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 144; Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 66. [13]Edwin Firmage, "Zoology," in *The Anchor Bible Dictionary,* ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 6:1147. [14]Hill, 149. [15]Confucius *Analects* 15.23. [16]Isocrates *Nicocles* (*The Cyprians*) 61. [17]Diogenes Laertius *Lives of Eminent Philosophers* 5.21. [18]Talmud *Shabbath* 31a. [19]Tobit 4:15 (NRSV). [20]Sirach 31:15 (NRSV).

[21]Letter of Aristeas 207. [22]*லூக்கா 6:31ல் இயேசுவினால் தரப்பட்ட பொன்விதியானது, ஒருவர் தமது விரோதிகளைச் சிநேகித்தல் மற்றும் அவர்களை எதிர்த்துத் தாக்காதிருத்தல் என்ற சந்தர்ப்பப் பொருளில் உள்ளதாகத் தோன்றுகிறது (காண்க லூக்கா 6:27-36).* [23]Mounce, 66. [24]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 113. [25]Talmud *Shabbath* 31a. [26]France, 146. [27]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 127. [28]France, 146. [29]*ரபீத்துவ இலக்கியத்தில் இரண்டு சாலைகள் கூடக் சித்தரிக்கப் பட்டுள்ளன. இவைகள் பரதீசுக்கோ அல்லது கெகென்னாவுக்கோ வழிநடத்துகின்றன.* (Talmud *Berakoth* 28b.) [30]Donald A. Hagner, *Matthew 1-13,* Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 178.

[31]*காண்க* Josesphus *Antiquities* 20.5.1, 2; *Wars* 2.13.5. [32]*காண்க Didache* 11-13; 16.3; Ignatius *Philadelphians* 2.1, 2. [33]Hill, 151. [34]*நல்லகனி என்பதற்கான குறிப்புகளுக்கு காண்க யோவான் 15:8; கலாத்தியர் 5:22-24; எபேசியர் 5:9-12; கொலோசெயர் 1:10; யாக்கோபு 3:17, 18.* [35]*"அந்தநாள்" என்பதற்கான குறிப்புகளுக்குக் காண்க மத்தேயு 24:36; லூக்கா 10:12; 17:31; 21:34; 2 தெசலோனிக்கேயர் 1:10; 2 தீமோத்தேயு 1:12, 18; 4:8.* [36]*நியாயத்தீர்ப்பின் நாள் பற்றிய விவரிப்புகளுக்கு காண்க மத்தேயு 24:36-51; 25:31-46; நடபடிகள் 17:30, 31; 2 கொரிந்தியர் 5:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15.* [37]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 182, n. 87. [38]Mounce, 70. [39]Wilkins, 53-54; *காண்க* Gordon Franz, "The Parable of the Two Builders," *Archaeology in the Biblical World* 3 (June 1995): 6-11. [40]A. T. Robertson, *Word Pictures in the New Testament*, vol. 1, *The Gospel According to Matthew-The Gospel According to Mark* (Nashville: Broadman Press, 1930), 63.

[41]Mounce, 64. [42]Herbert Hoover, address to World's Conference of the Young Men's Christian Association (YMCA), Cleveland, Ohio, 8 August 1931. [43]*இந்த விவரிப்பை எழுதிய தோற்றக்கால எழுத்தாளர் யார் என்று அறியப்படவில்லை.*